998

[தொகுதி II.] 1932ஞு ஏப்ரல்மீ [பகுதி 3.

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தா
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

# மாதவி மாதவன் 2-பாகம்

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவ

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவா
கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் விரம்
யாது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்க
பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்
பகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 6-பாகம் விலை ரூபா 11-10

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள்
நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான
நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய
காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய
ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவி
யும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்
றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதி
உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற
மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி

அல்லது

## ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெ
தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்
பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுள
ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பா
செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அ
களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை
யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவ
மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களா
படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதரா

அவன் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு அங்கே இருந்த பத்திரிகையை எடுத்துப் படித்துக்கொண்டிருந்தான். அதில் சனிக்கிழமை இரவு கிரௌன் தியேட்டரில் நடந்த ராஜலட்சுமியின் ஆற்றலைப் பற்றி வர்ணிக்கப்பட்டிருந்ததையே அவன் படித்தானே யொழிய வேறு அரசியல், சமூக விஷயங்களை அவன் படித்தவனல்ல. அத்தகைய விஷயங்களைப் படித்து அத்துறையில் உழைப்பது வேலையில்லாதவர்களுடைய தொழில் என்பது அவனுடைய அபிப்பிராயம்.

அச்சமயத்தில் தினகரம் பிரபு, சந்திரசேகரனைப் பார்க்கும் பொருட்டு அங்கே வந்தான். அதற்கு முன்தினமாகிய ஞாயிற்றுக்கிழமை யன்று விரத நாளாக இருந்தும் அப்பிரபுக்களிருவரும் ஒன்றாகச் சாப்பிட்டுவிட்டு இரவு ஒரு விபசாரியின் வீட்டுக்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் இரவு முழுதும் தங்கியிருந்து மதுபான வகைகளை அருந்தியதுடன் பல முறை ஸ்திரீ புருஷ சேர்க்கையில் ஈடுபட்டதாலும், தூக்கமில்லாம லிருந்ததாலும் அவர்கள் முகத்தில் தெளிவு இருக்கவில்லை. எனினும் சந்திரசேகரம், தினகரனை விட தேகதிட முடையவனும், துர்ச் செய்கைகளில் பழக்க முடையவனாகவும் இருந்தபடியால் அவன், அவ்வளவு கஷ்டத்தை யடையவில்லை. மறுநாள் காலை சிறிது தூங்கிவிட்டு காலை ஆகாரம் சாப்பிட்டதும் அவனது முகத்தில எத்தகைய அயர்ச்சியும் காணப்படவில்லை. தினகரன் மெல்லிய தேகமுடையவனும் பலஹீனனுயுமிருந்ததால் அவன் முகம் வாடி இருந்தது. தினகரம் பிரபு, அங்கிருந்த மற்றொரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, 'எனக்கு இன்று காலை முதல் தலைவலி பொறுக்க முடியாததாயிருக்கிறது. வயிற்று வலியின் தொல்லையும் அதிகம். இவ்வளவு வலியை நான் எப்போதும் அடைந்ததில்லை. இதோ பார்! என் கைகளும்



186567

நடுங்குகின்றன,' என்று கூறினன். அதற்கு சந்திரசேகரன் 'ஒரு சோடா பாட்டிலில் சிறிது பிராந்தியைக் கலந்து அதைச் சாப்பிட்டால் செளகரியமாய்விடும்' என்று யோசனை கூறினன். அவ்வாறே உட்கொள்ள தினகரம் பிரபு சம்மதித்ததால் சேவகன் அதைக் கொண்டுவந்து கொடுக்கவே அவனும் அதை அருந்தினன். பிறகு அவர்களிருவருக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது:

சந்திரசேகரம்:—சனிக்கிழமை இரவு ராஜலட்சுமி சிறப்பாக நடித்ததைப் பற்றி பத்திரிகையில் பிரமாதமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆ! அவள் மிக அழகானவள் என்பதில் என்ன ஆட்சேபமிருக்கிறது.

தினகரம்:—ஆம்! அவளது அழகே அழகு. அவளுக்காக நான் எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன். என் உடம்பு இன்று இருக்கும் நிலைமையில் இன்று முழுதும் படுக்கையிலேயே இருந்திருப்பேன். ஆனல் ராஜலட்சுமியைப் பற்றிப் பேசுவதற்காகவே இப்போது இங்கே வந்தேன்.

சந்திரசேகரம்:—சரி; அப்படியானல் உன் மனதிலுள்ளதை விவரமாகத் தெரிவித்துவிடு.

தினகரம்:—எனக்கு என்னவேண்டுமென்பது உனக்குத் தெரியாதா? எப்படியாவது அந்த ராஜலட்சுமி இடம் என்னை அறிமுகம் செய்துவைக்கவேண்டும். இது உன்னல் எளிதில் முடியக்கூடிய காரியம். இப்போது இக்காரியத்தைச் செய்து முடிக்கவும்.

சந்திர:—ஷண்பகம் என்ன நினைப்பாள். தன் காதலன் மற்றொரு மாதினிடம் சினேகமாவதில் தன் சகோதரனே துணையாயிருக்கிறன் என்று ஷண்பகம் அறிந்தால் ஏதேனும் நினைக்கமாட்டாளா?

தினகரம்:—இதைப் பற்றி ஷண்பகத்துக்கு ஒன்றுமே தெரியக்கூடாது. உன் சகோதரியை மணந்துகொள்வதாக நிச்சயமாயிருக்கிறதென்றாலும் சுமார் இருபத்தொன்று வயதான நான், விவாகம் முடியும் வரை பிரமசரியத்துடன் இருப்பதென்றால் அது முடியக்கூடிய காரியமா? ஆதலின் அதைப் பற்றிக் கவலை வேண்டாம்.

சந்திர:—நான் வேடிக்கைக்காகச் சொன்னேன், உண்மையில் நாம் இருவரும் அழகிற் சிறந்த ராஜலட்சுமியுடன் சினேகம் செய்துகொள்ளவேண்டியது மிக அவசியம்தான். அவள் தன் வாழ்க்கையில் நீண்டகாலம் பரிதிபுரத்தில் வாழ்ந்தாளென்றாலும் அவள் இரத்தினபுரியைச் சேர்ந்தவளே என்று பத்திரிகை மூலம் தெரிகிறது. நம்முடைய இரத்தினபுரியிலுள்ள பல அழகிய மாதர்களைவிட மிக அழகானவளாய் இருக்கிறாள் என்பதில் ஆட்சேபமே யில்லை.

தினகரம்:—அவள் இரத்தினபுரியைச் சேர்ந்தவளாயினும் சரி அல்லது பரிதிபுரத்தைச் சேர்ந்தவளாயினும் சரி. அவள் இதுவரை என் வாழ்க்கையில் கண்டிராத அவ்வளவு வசீகரத்தன்மையையும், ரூபலாவண்யத்தையும் உடையவளாக இருக்கின்றாள். ஆனால் உன் சகோதரி ஷண்பகம் சீமாட்டி தான் எல்லாரையும்விட அழகானவள் என்பதில் சந்தேகமில்லை. ராஜலட்சுமியுடன் சினேகம் செய்துகொள்வது சாத்தியமான காரியம்தானே?

சந்திர:—நேற்று சினிமா கொட்டகையில் பேசிக்கொண்டதை நீ கவனிக்கவில்லையா? இவ்வாறு பகிரங்க மேடைகளுக்கு வரும் பல பெண்களைப்போலில்லாமல் ராஜலட்சுமி ஒழுக்கத்திலும் அறிவிலும் சிறந்தவள் என்று கூறிக்கொண்டார்களே. மேலும் அவளுடைய அந்தரங்க வேலைக்காரி சதாகாலமும் அவளுடனேயே இருந்துகொண்டு அவள்மீது

யாரும் கண் போடாதபடி பார்த்துக்கொள்கிறாளாம். அவள் மற்றவர்களைப்போல் நாடகக்காரர்களுடனேயே தங்கியிராமல் வெளியில் எங்கேயோ தங்கியிருந்து அவள் வரவேண்டிய வேளைக்கு மட்டும் வந்துபோய்விடுகிறாளாம். அன்றியும் அவள் தங்கி இருக்கும் இடமும் கம்பெனி முதலாளி தவிர வேறு எவருக்குமே தெரியாதென்றும், பேசிக்கொள்கிறார்கள்.

தினகரம்:—இது ஒரு பிரமாதமா? அவள் தங்கியிருக்கும் இடத்தைச் சுலபமாகத் தெரிந்து கொண்டுவிடலாம். ஆட்டம் முடிந்ததும் அவள் பின்னாலேயே ஒரு ஆள்போனால் தெரிந்துவிடுகிறது.

சந்திர:—சரி, அவள் தங்கியிருக்கும் இடத்தைக் கண்டு பிடித்துவிட்டதாகவே வைத்துக் கொள்வோம். பிறகு என்ன செய்வாய்? நாம் நேற்று அவளைப் பற்றிக் கேள்விப்பட்டதிலிருந்து, நாமே தைரியமாக அவள் வீட்டுக்குச் சென்றாலும் அவள் நம்மை, நாம் எதிர்பார்க்கிறபடி அவ்வளவு நல்ல முறையில் வரவேற்பாளென்று நினைக்க முடியவில்லையே. ஆனாலும் அவளுடன் சினேகம் செய்துகொள்வதற்குவேண்டிய வழி இல்லாமற் போகவில்லை. அதைப் பற்றிச் சாவகாசமாக யோசிக்கவேண்டும். முதலாவதாக, அவள் மறுமுறை சினிமா மேடைக்கு வரும்போது, அவளைப் பின் தொடரும்படி எனது வேலைக்காரனை ஆறுமுகத்தினிடம் சொல்லிவிடுகிறேன். அவன் மிகவும் தந்திரசாலி. இப்படிப் பட்ட வேலைகளை யெல்லாம் மிகச் சாமர்த்தியமாகச் செய்து முடிப்பான். அவன் அவளுடைய இருப்பிடத்தைத் தெரிந்து கொண்டுவிட்டால் பிறகு நாம் நமது வேலையை மேற்கொண்டு ஆரம்பிப்போம்.

தினகரம்:-ஒரு தாசியோ அல்லது நாடகக் கன்னியோ

அல்லது கடினமாதோ ஒழுக்கத்துடன் இருப்பாளென யார் நம்பமுடியும்! இதைச் சொன்னாலும் யாரும் ஒப்பமாட்டார்களே.

சந்திர:—அப்படிச் சொல்லாதே. ஒவ்வொரு விஷயத்திலும் விலக்குவிதி ஒன்று இருக்கிறதல்லவா? இவ்விஷயத்தில் ராஜலட்சுமியே அதற்கு உதாரணமாக இருக்கிறாளென்று ஏன் நினைக்கக்கூடாது. எப்படியிருந்தாலும் உன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றி வைப்பதில் என்னாலியன்றதைச் செய்யத் தவறமாட்டேன். ஆறுமுகம் அவள் இருப்பிடத்தைக் கண்டுபிடித்த பிறகு நாம் நமது காரியத்தைத் தொடங்குவோம். இப்போது எனதன்புள்ள நேசா! நீ எனக்கொரு உதவி செய்வாயா?

தினகரம்:—உனக்கு உதவி செய்வதிலும் நான் தடை சொல்லப்போகிறேனா? ஆனால் இப்போது நான் பண நெருக்கடியால் அதிகக் கஷ்டப்படுவதால் பொருளுதவி மட்டும் கேட்கவேண்டாம். நான் இங்கு வருவதற்கு முன்புதான் என் தாயாரிடம் என்வசம் பணம் ஒன்றுமில்லையென்றும், எனது கார்டியன்களிடம் சொல்லி எனக்குப் பணம் தர ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கேட்டேன். அதற்கு அவள் மறுத்துவிட்டாள். அவர்களையே நேராகக் கேட்கலாமென்றால் நான் என் தாயாரிடம் பேசுவதுபோல் அவ்வளவு தாராளமாக அவர்களுடன் பேச முடியவில்லை.

சந்திர:—ஓ! உன்னுடைய கார்டியன்கள் பஞ்சநதம் பிரபுவும், மனமோகனரும் தானே.

தினகரம்:—ஆம்; அவர்கள்தான். ஒருவர் நமது தேசத்தின் சட்ட சபை அங்கத்தினராகவும், மற்றொருவர் பிரபல பாரிஸ்டராகவும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட

முரட்டுச் சுபாவமுடையவர்களுடன் நான் அழவேண்டியதாயிருக்கிறது. முன்பு ஒரு முறை நான் பணம் கேட்டபோது அவர்கள் எனக்கு செலவுக்கு அவசியமான தொகையை அனுமதித்திருப்பதாகவும், அப்படியிருந்தும் நான் அடிக்கடி வேறு தொகையைக் கேட்பது ஒழுங்கல்ல வென்றும் கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள்.

சந்திர:—இப்படியும் கார்டியன்களுக்கு அடங்கியிருப்பதென்றால் மிகக் கஷ்டம்தான். எனக்கும் கடன் தொல்லை அதிகமாயிருக்கிறது. எப்படியாவது நான் இப்போது இரண்டு அல்லது மூன்று ஆயிரம் பவுன் சம்பாதிக்கவேண்டும். நான் முன்னரே உனக்கு ஐயாயிரம் பவுன் வரை தரவேண்டியிருப்பதால் இப்போது உன்னைக் கேட்கவும் நான் சங்கோசப்பட்டேன். ஆயினும் என் கடன்காரர்களுடைய தொல்லை பொறுக்க முடியாமல்தான் உன்னைக் கேட்கவேண்டியதாயிற்று.

தினகரம்:—பழைய பாக்கி கிடக்கட்டும். அதைப்பற்றி நான் கவலைப்படப்போவதில்லை. இப்போது சமயத்தில் உனக்கு உதவி செய்யமுடியவில்லையே என்று தான் வருத்தப்படுகிறேன். என்னிடம் மட்டும் இப்போது பணம் இருந்தால் உன் கடன் தொல்லை ஒழிந்துபோகும்படி செய்துவிடுவேன். எப்படியாயினும் இப்போது நீ பணம் திரட்டித்தானே யாகவேண்டும்.

சந்திர:—ஆம்; அதில் ஆட்சேபமென்ன ? பணம் திரட்டித்தான் ஆகவேண்டும். இந்நகரில் எத்தனையோ புரோக்கர்களும், கமிஷன் ஏஜெண்ட்களும், மற்றும் பலரும் இருக்கிறார்கள். அவர்களிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போதும்; எப்படியாவது நமக்கு வேண்டிய தொகையைக் கடனாக வாங்கிக் கொடுத்துவிடுவார்கள். ஆனால் நான் இப்

போது என் தலையை வெளியில் காட்டமுடியாது. எல்லா ருடைய மூலமாகவும் நான் தாராளமாகக் கடன் வாங்கிவிட்டிருக்கிறேன்.

**தினகரம்:**—ஓ! எனக்கொரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. பரிதிபுரத்திலிருந்து செல்வநாதர் என்னும் கிழவன் வந்திருக்கிருனல்லவா? அவன் ஏதோ பாங்கிவைத்திருந்தான் என்று தெரிவதால் அவனிடம் கட்டாயம் பணம் இருக்கும் என்றே நினைக்கிறேன்.

**சந்திர:**—ஆம்! வாஸ்தவம்தான். நாம் இப்போது அவனைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்றே நினைக்கிறேன். நீ சொன்னபடி அவனிடம் பணம் இருக்கவேண்டு மென்றே நானும் கருதுகிறேன். ஆனல் செல்வநாதரைப் போன்ற வயதும் அனுபவமும் பெற்றவர்களிடமிருந்து நாம் எதிர்பார்க்கிறபடி எளிதில் பணம் பெற்றுவிட முடியாது. ஆயினும் முயற்சி செய்வதால் என்ன தீமை விளைந்துவிடப் போகிறது.

இவ்வாறு கூறிக்கொண்டே சந்திரசேகரம் எழுந்து சென்று கடிதம் எழுதுவதற்கு வேண்டிய சாமான்களைக் கொணர்ந்து பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினன். "அன்புள்ள செல்வநாதரே! சென்ற சனிக்கிழமை மாலை தாங்கள் என்னைச் சந்தித்தபோது நான் எவ்வாறு தங்களுக்கு மரியாதை செய்யவேண்டுமென்று நினைத்தேனே அவ்வாறு செய்ய சந்தர்ப்பம் வாய்க்காமற் போனதற்காக வருந்துகிறேன். எனினும் தாங்கள் தயவு செய்து நாளை மாலை சுமார் ஆறு மணிக்கு என்னுடன் என் மாளிகையில் விருந்துண்ண ஒப்புக்கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது என்னுடைய அந்தரங்க நண்ப

ரான தினகரம் பிரபுவைத் தவிர வேறு யாரும் இருக்கமாட்டார்களாதலால் நாம் தாராளமாக எதையும் பேசலாம்.''

அக்கடிதத்தை சந்திரசேகரம் தன் நண்பனுகிய தினகரம் பிரபுவினிடம் காண்பித்து, "இக்கடிதம் எழுதியது சரிதானு பார்?'' என்று கேட்டான். அவனும் அதைப் படித்துப் பார்த்துவிட்டு, 'ஓ, இவ்வளவு போதாதா? நாளைய தினம் அக்கிழப்பையல் இங்கே வரும்போது நீ அவனுக்குப் பலமான விருந்து அளித்து அவனை நமது வழிக்குக்கொண்டு வந்துவிடவேண்டும். எப்படியாவது அவனிடமிருந்து சில ஆயிரம் பவுன்களை வாங்கிவிட முயற்சி செய்யவேண்டும்' என்று சொன்னுன். அப்போது சந்திரசேகரம், 'ஆம்; நாம் இருவரும் சேர்ந்து ஒரு பத்திரம் எழுதிக்கொடுத்தால் அவன் ஒன்றும் ஆட்சேபிக்காமல் நாம் கேட்கும் தொகையைக் கொடுக்கத் துணிவானென்றே நினைக்கிறேன். வட்டிக்குப் பணம் கொடுத்துத் தங்கள் பணத்தைப் பெருக்க விரும்புகிறவர்கள் பிரபுக்களுக்குக் கடன் கொடுப்பதென்ருல் சிறிதும் பின் வாங்குவதில்லை. செல்வநாதரும் இந்நகரில் பல பிரபுக்களுடன் சினேகம் செய்துகொள்ள விரும்புவதால் நம்முடன் தாராளமாகப் பழக அவன் சம்மதிப்பான் என்பது நிச்சயம். எதற்கும் இக்கடிதத்தை அனுப்பிவிடுகிறேன்,' என்று தெரிவித்தான்.

அப்படியே கடிதமும் அனுப்பப்பட்டது. சந்திரசேகரம் தன்னை அலங்கரித்துக்கொண்ட பிறகு இருவருமாக வெளியே புறப்பட்டனர். இருவரும் பிரபுக்கள் வீட்டுப் பிள்ளைகள் கேட்கவேண்டுமா? பல பொழுதுபோக்கு சங்கங்களில் அங்கத்தினர்களாயிருந்தார்கள். ஆகவே அவர்கள் முதலில் வாணி விலாச சபைக்குச் சென்று அங்கே சொற்பநேரம் அவர்களைப் போன்ற சோம்பேறிகளுடன் சீட்டு ஆடிக்

கொண்டிருந்தார்கள். அவ்வாறு சொற்ப நேரம் கழிந்த பிறகு தினகரம் பிரபுவின் மாளிகையைச் சேர்ந்த குதிரை லாயத்துக்குச் சென்று சவாரிக்கு ஏற்றதான இரு குதிரைகளைப் பிடித்துக்கொண்டு இருவரும் நீண்ட நேரம் பார்க்குகளில் சவாரிசெய்து கொண்டிருந்தார்கள். பிறகு சொற்ப நேரம் நகரத்தின் மத்தியிலுள்ள நந்தவனம் ஒன்றில் உட்கார்ந்துகொண்டு அவ்வழியே செல்லும் மாதர்களை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இதற்குள் மாலை ஏழுமணியாய்விட்டதால் எந்த ஓட்டலில் சாப்பிடுவது என்பதுபற்றி அரைமணி நேரம்வரை யோசித்தார்கள். பற்பல ஓட்டல்களையும் பற்றிப் பலவாறு குறைகூறிக் கொண்டே வந்து கடைசியில் ஏதோ ஒரு ஓட்டலில் சாப்பிடுவதென முடிவு செய்துகொண்டு அங்கே சென்று ஆகாரம் அருந்தினர்.

இரவு பத்து மணிக்குமேல் எங்கேயாவது சூதாடச் செல்லவேண்டுமென்று நினைத்து, அந்நகரத்தில் இரகசியமாக ஸ்தாபிக்கப்பட்டு இராக்காலங்களில் நடந்துவந்த சூதாட்ட சபை ஒன்றுக்குச் சென்றார்கள். அதை அந்நகரின் வடகோடியில் மிக்க ஏழைகள் வசிக்கும் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட ஒரு மாடி வீட்டின் பின்பாகத்தில் ஏற்படுத்தியிருந்தார்கள். தினகரம் பிரபுவைப்போன்ற பிரபுக்களான சூதாடிகள் அங்கு இரவு பதினொரு மணிக்குமேல் கூடுவதுண்டு. சந்திரசேகரனும் தினகரனும் அன்றிரவு அங்குச் சென்றபோது வேறு சிலரும் அங்கே சூதாடிக்கொண்டிருந்தனர். அதை அமைத்தவர்கள் அங்கு ஆடுவோரிடமிருந்து அதிகமான பணத்தை வாங்கிக்கொள்வது வழக்கம். இந்த இரகசிய இடத்தை எப்படியாவது கண்டுபிடித்துவிட வேண்டுமென்று அந்நகர போலீசார் சொற்ப காலமாகவே தேடிக்கொண்டிருந்தனர். தினகரம் பிரபு அங்கே சென்ற

அதே தினத்தில் அவர்களும் இந்த இடத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள். சூதாட்ட விடுதியை அமைத்தவர்கள் எவ்வளவோ ஜாக்கிரதையாய் இருந்தும் போலீசார் மிக்க தந்திரமாக இரவு ஒரு மணி சுமாருக்கு அக்கட்டடத்தில் புகுந்து அங்கிருந்த சாமான்களையும் பணத்தையும் கைப்பற்றியதுடன் அனைவரையும் கைது செய்துவிட்டார்கள். அனைவரும் அந்த இடத்துக்கு அதிக சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். உடனே தினகரம் பிரபு தனக்கு மிக்க பழக்கமான நான்கு வியாபாரிகளை வரவழைத்துத் தனக்கும் சந்திரசேகரனுக்கும் ஜாமீன் கொடுத்து அழைத்துக்கொண்டு போகும்படி கேட்டுக்கொண்டான். அவர்களும் அப்படியே செய்தார்கள். அதன் மீது அவர்கள் இருவர் மட்டும் ஜாமீனில் வெளிவந்தனர். அப்போது மணி இரண்டு இருக்கும். அச்சமயத்திலும் வீட்டுக்குச் சென்று படுத்துறங்க அவர்களுக்கு மனம் வரவில்லை. இருவரும் அருகிலிருந்த ஒரு இரகசிய மதுபானக் கடைக்குச் சென்று நன்றாக அருந்திவிட்டுத் தட்டுத் தடுமாறிக்கொண்டே இருவரும் அவரவர் வீட்டை யடைந்தனர்.

மறுநாட் காலை அதிக நேரத்துக்குப் பின்னர் தினகரம் பிரபு எழுந்திருந்தபோது எப்போதையும்விட அன்று அதிக தலைவலியையுடையவனாய் இருந்தான். ஆயினும் அவன் சோம்பேறித்தனமாக வீட்டில் இருக்கமுடியாமல் மிக அவசரமாக மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குப் போகவேண்டியதாயிருந்தது. ஆகவே அவனும் சந்திரசேகரனும் முன்னாள் இரவு சூதாட்ட சம்பந்தமாய் ஏற்பட்டிருக்கிற வழக்குக்காக கிரிமனல் கோர்ட்டுக்குச் சென்றார்கள். அங்கே வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதும் மாஜிஸ்ட்ரேட், சாட்சியம் ருஜுவாகவில்லை யென்று சொல்லி எல்லாரையும் விடுதலை

செய்துவிட்டார். சந்திரசேகரனும் தினகரனும் சந்தோஷத்துடன் ஒருவர் தோள்மீது மற்றொருவர் கையைப் போட்டுக் கொண்டவண்ணமாக உல்லாசமாய் வெளியே சென்றார்கள்.

அப்போதுதான் சந்திரசேகரன் தனக்குச் செல்வநாதரிடமிருந்து பதில் கிடைத்ததாகவும், அதில் அவர் விருந்துக்கு வர ஒப்புக்கொண்டதாகவும் தினகரனிடம் தெரிவித்தான். அப்போது தினகரம் பிரபு, 'அப்படியானால் நான் வீட்டுக்குச் சென்று இரண்டு மூன்று மணி நேரமாவது தூங்கிவிட்டு உடம்பைச் சரிப்படுத்திக்கொள்ளவேண்டும். அப்போது தான் மாலை விருந்தில் இன்பமாக இருக்க முடியும்' என்று சொல்லிவிட்டுத் தன் வீட்டுக்குச் சென்றான். சந்திரசேகரனும் தன் இருப்பிடமாகிய மாளிகைக்குச் சென்றான்.

தினகரம் பிரபு வீட்டுக்குச் சென்று படுத்துக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடன் படுக்கை யறைக்குச் சென்றபோது ஒரு சேவகன் அவனிடம் சென்று அவனை அவனுடைய தாயாராகிய ஹேமவதி சீமாட்டி அழைக்கிறாள் எனத் தெரிவித்தான். முதலில் அப்போது வரமுடியாதென்றும் பிறகு பார்த்துக்கொள்வதாகவும் சொல்லி யனுப்பி விடலாமென நினைத்தான். ஆனால் செல்வநாதர் பண உதவி செய்யாவிட்டால் தன் தாயின் உதவியையே நம்பியிருக்க வேண்டியதாக இருக்குமாதலின் அவளுடன் சமாச தோரணையிலேயே இருப்பது நலமெனக் கருதி அச்சேவகனுடன் அவள் இருந்த அறைக்குச் சென்றான்.

## 7-வது அத்தியாயம்

### பிரபுக்கள் குடும்பங்களின் நிலை.

இவ்விஷயம் கூறப்படும்போது ஹேமவதி சீமாட்டிக்கு வயது நாற்பது. அந்நகரிலுள்ள பிரபுக்கள் வீடுகளிலிருந்த எல்லா மாதர்களைக் காட்டிலும் அவள் ரூபலாவண்ய முடையவளாய் இருந்தாள். அவள் வாலிபத்தில் எப்படி அழகுடையவளாயும் தேகக் கட்டுடையவளாயும் இருந்தாளோ அப்படியே இந்த நாற்பதாவது வருஷத்திலும் இருந்தாள். அவளுடைய பார்வையினாலேயே அவளது வாலிபம் கொஞ்சமும் குறையவில்லை என்பதும், பார்ப்போர் மனதை வசீகரிக்கும் தன்மையுடையவளாய் இருந்தாளென்பதும் நன்கு தெரியும். அவள் சரிகையோடு கூடிய கரிய ஆடையை அணிந்திருந்தாள். அவள் உட்கார்ந்திருந்த அறை மிக விசாலமானதாயும், மேஜை, நாற்காலி, கட்டில் முதலிய பல சாமான்களைக் கொண்டதாகவும், பல விசித்திர படங்களுடன்கூடியதாயும் இருந்தது. தினகரன் அவ்வறையில் நுழைந்தபோது, தன் தாயார், அறையின் மத்தியிலிருந்த ஒரு மேஜையின் சமீபத்தில் போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தாள். அவள் உட்கார்ந்திருந்த முடுக்கான மாதிரியிலிருந்து அன்று ஏதோ போர் நடக்கப்போகிறதென்று அவன் சந்தேகித்தான். ஆயினும் முன் அத்தியாயத்தின் இறுதியில் கூறிய காரணத்துக்காக அவன் அவளுடன் சமாசமாகவே இருந்தான். ஆகவே அவள் ஏதேனும் கோபித்துக்கொண்டாலும் அவன் அதைப் பாராட்டாதவன் போலவே இருந்தான். அவளது பார்வையிலிருந்து அவள்

தன்னிடம் அதிக கோபத்துடனும் வெறுப்புடனும் இருக்கிருள் என்பதும் அவனுக்குத் தெரிந்தது.

அவனைக் கண்டதும் ஹேமவதி சீமாட்டி, 'தினகரம்! உட்காரு. மிகவும் முக்கியமான சில விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டியிருக்கிறது,' என்ருள். அதற்கு அவன், 'அன்புள்ள தாயே! நீ என்ன சொல்லுகிருய் என்பதை நான் மிக ஜாக்கிரதையாய்க் கவனிக்கிறேன். உன் மனதிலுள்ளதைத் தாராளமாகச் சொல்,' என்ருன்.

ஹேமவதி:—நீ உன் நடத்தைகளினின்றும் திரும்பி நல்ல நடத்தைக்கு வரவேண்டும். ஏனெனில் உன் நடத்தை எனக்குச் சிறிதும் பிடிப்பதில்லை. இனி என்னுல் பொறுக்க முடியாது.

தினகரன்:—ஓ! நீ இவ்வாறு அதிகாரம் செய்யக் கூடாது. நான் எவ்வளவோ அடக்கத்துடன் இங்குவந்து உட்கார்ந்திருக்கிறேன். இச்சமயத்தில் ஏதேனும் தகாறு ஏற்படுமாயின் அதற்குக் காரணம் நீயே யொழிய நானல்ல என்று இப்போதே தெரிவித்துவிடுகிறேன்.

ஹேமவதி:—தகாரு! இப்படிப்பட்ட பதத்தை என் எதிரில் உபயோகிக்க உனக்கு என்ன தைரியமிருக்கவேண்டும்.

தினகரன்:—தாயே! ஆத்திரப்படவேண்டாம். கோபத்தை அடக்கிக்கொண்டு நிதானமாகப் பேச முயற்சி செய்.

ஹேமவதி:—நான் சொல்வதைக் கேள். நீ இப்போது சிறிது காலமாக மிகக் கேவலமான ஒழுக்கங்கெட்ட முறையில் உன் வாழ்க்கையை நடத்திவருகிருய்.

தினகரன்:—இந்த விஷயத்தைப் பற்றி நீ பல முறை

சொல்லிவிட்டாயல்லவா ? மறுபடியும் இதைப் பற்றி என் பிரஸ்தாபிக்கிறுய். இதைச் சொல்லத்தானு நீ என்னை அழைத்தது ?

ஹேமவதி:—பேசாமல் நான் சொல்வதைக் கேள். எதிர்த்துப் பேசவேண்டாம். இதற்குள் நீயே எஜமானனுகி விடவில்லை என்பது ஞாபகத்திலிருக்கட்டும். உன் மைனர் பருவம் தீருவதற்கு இன்னும் ஒரு வருஷம் பத்துமாதம் இருக்கிறது. அதற்குள் உன்னை நல்ல வழிக்குக் கொண்டு வந்துவிடவேண்டுமென்று நானும் உன் கார்டியன்களும் தீர்மானித்திருக்கிறேம். தினகரம் ! நான் உன்னிடம் இதைப் பற்றிப் பலமுறை பலவிதமாகச் சொல்லியிருக்கிறேன். நல்ல வார்த்தைகளால் சொல்லிப் பார்த்தேன், கோபித்துக்கொண்டும் சொன்னேன், ஆனுல் எதுவும் எதிர்பார்த்த பயனை அளிக்கவில்லை. தினசரி நீ பல இழிதொழில்களில் பிரவேசிப்பதையும், இராக்காலங்களில் வீட்டில் இல்லாமல் கண்ட விபசாரிகளின் வீட்டில் தங்குவதையும் நான் மிக்க துக்கத்துடன் கவனிக்கிறேன். பல துஷ்டர்களுடைய சகவாசத்தை வைத்துக்கொண்டு பணத்தைப் பலவிதமாகவும் செலவழித்து வருகிறுய்.

தினகரன்:—நீ பேசுவதன் அர்த்தமென்ன ? சந்திரசேகரம் பிரபுதானே என்னுடைய அந்தரங்க தோழன். அவனே நீயாக எனக்கு மனைவியாக இருக்கவேண்டுமென்று தேர்ந்தெடுத்த பெண்மணியின் சகோதரன். அப்படியிருக்கும்போது நான் துஷ்டர்களுடன் சகவாசம் செய்வதாக நீ எப்படிக் கூறலாம்.

ஹேமவதி:—ஷண்பகவல்லி உயர்ந்த குணுதிசயங்களுடன் கூடிய உத்தமி என்பதில் சந்தேகமே இல்லை. ஆனுல்

அவளுடைய சகோதரன் அதற்கு முற்றிலும் முரண்பட்டவன். அவன் எவ்வளவு தூரம் கெட்டுப்போயிருக்கிறன் என்பதை அவளே அறியமாட்டாள். அவன் அதிக செலவாளி என்றும், பலவிதமான போகவாழ்க்கையை அனுபவிப்பதில் பணத்தைச் செலவிடுகிறன் என்றும் அவள் தெரிந்துகொண்டிருக்கிறளே யொழிய அவன் சூதாட்டக்காரன், குடியன், விபசாரன் என்பது அவளுக்குத் தெரியாது. மேலும் அப்பெண்ணை நீ மணந்துகொள்ள வேண்டுமென்று நான் நிச்சயித்தபோது எனக்கும் அவன் இவ்வளவு கெட்டவன் என்பது தெரியாது. முன்பே தெரிந்திருந்தால் உன்னை இவ்வளவு கெட்ட சகவாசத்துக்கு ஆளாக்கும் முறைக்கு நான் இடம்கொடுத்திருக்கமாட்டேன். ஆனல் இப்போது நீ அவளை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்னும் நிச்சயத்தை மாற்றமுடியாது.

தினகரன்:—அப்படி நீ மாற்றவேண்டுமென்று நினைத்தாலும் என்னுடைய சம்மதமில்லாமல் எதுவும் செய்யமுடியாது. நான் அவளை அதிகம் காதலிக்கிறேன். என் மைனர் பருவம் தீரும்வரை காத்திராமல் நாளைக்கே கலியாண முகூர்த்தம் வைத்துவிட்டாலும் நான் அவளை மணந்துகொள்ளச் சித்தமாக இருக்கிறேன்.

ஹேமவதி:—இல்லை, அப்பா! உன் தகப்பனர் எழுதி வைத்திருக்கும் உயிலில் நீ உன் மைனர்பருவம் தீர்ந்த பிறகு தான் கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறர் என்று முன்னமே தெரிவித்திருக்கிறேன் அல்லவா? மைனர் பருவம் நீங்கியதும் எவ்வளவு விரைவில் கலியாணம் செய்துகொண்டாலும் பாதகமில்லை.

தினகரன்:—என் தந்தையார் உண்மையிலேயே நல்லெண்ணத்துடன்தான் அவ்வாறு எழுதிவைத்தார் என்பதில்

சந்தேகமில்லை. அவர் இரண்டு கலியாணம் செய்துகொண்டவராதலால் அதன் மதிப்பு அவருக்குத் தெரிகிறது. எனக்குத் தலைவலி அதிகமாயிருப்பதனாலும், உடனே போய்ப் படுத்துக்கொள்ளவேண்டுமென்று தோன்றுவதாலும் நீ சொல்லவேண்டியதை விரைவில் சொல்லி முடித்துவிடு.

ஹேமவதி:—ஐயோ! சந்தோஷமற்ற பிள்ளையே! உன் சொந்த நடத்தைகளால் நீயே தற்கொலை செய்துகொள்ளப் பார்க்கிறாய். ஷண்பகவல்லி தன் சிற்றப்பனுடைய இஷ்டப்படி நடக்கிறவள். அவள் உன்னுடைய தவறான செயல்களைப் பற்றித் தெரிந்துகொண்டுவிட்டால் ஒருகால் உன்னை விவாகம் செய்துகொள்வதென்னும் எண்ணத்தை மாற்றிக் கொண்டுவிடலாம்.

தினகரன்:—இல்லவே இல்லை. அவள் ஒருகாலும் அப்படிச் செய்யமாட்டாள். அவளுக்கு என்னிடம் அதிக ஆசை என்பதை நான் அறிவேன். மேலும் அவள் ஏழையாகவும், தக்க சௌகரியமான வாழ்க்கை நடத்த முடியாதவளாயும் இருப்பதால் என்போன்ற ஒரு பணக்காரனை விவாகம் செய்துக்கொள்வதினின்றும் தவறமாட்டாள்.

ஹேமவதி:—நீ இப்போது கூறும் அபிப்பிராயம் சரியானதென்றே தோன்றுகிறது. உன்னை ஏன் இங்கே வரவழைத்தேன் என்பதைப் பற்றி இப்போது சொல்லிவிடுகிறேன் கேள். உன் கார்டியன்களான பஞ்சநாதம் பிரபுவும் மனமோகனரும் நேற்று இங்கு வந்திருந்து நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். உன்னை இந்நகர வாழ்க்கையினின்றும் விலக்கி கிருஷ்ணகிரியில் கொஞ்ச காலம் கொண்டு போய் வைத்துக்கொள்ளும்படி அவர்கள் யோசனை கூறினார்கள். நானும் அப்படியே செய்வதென உத்தேசித்திருக்கிறேன். ஷண்பகவல்லியும் மதனவல்லியும் அடிக்கடி அங்கு

வந்து கொண்டிருப்பார்கள். ஆதலின் நீ உனக்கு மனைவியாகப் போகிற பெண்ணுடன் நெருங்கிப் பழகலாம்.

தினகரம்:—என்ன? அந்த கிராம வாழ்க்கையில் என்னைப் புதைத்துவிடலாமென்று நினைக்கிறாயா? அது முடியவே முடியாது. அங்கே அழைத்துச் சென்றால் நான் தற்கொலை செய்துகொண்டு இறந்துபோவேன்.

ஹேமவதி:—அப்படியா? நீ இரத்தினபுரியை விட்டு வெளியேறித்தான் ஆகவேண்டும். பஞ்சநதம் பிரபு உன்னை எப்படியாவது சொற்ப காலம் இரத்தினபுரிக்கு வெளியில் வைத்திருப்பதென்று நிச்சயித்திருக்கிறார்.

தினகரம்:—முடியாது. நான் போகமாட்டேன் என்று சொன்னால் அவர்தான் என்ன செய்யமுடியும்? கண்டவர்களுக்கெல்லாம் அடங்கி நடக்க என்னால் முடியாது.

ஹேமவதி:—நீ அப்படி யெல்லாம் செய்தால் உன்னுடைய கார்டியன்கள் இப்போது உனக்குக் கொடுத்துவரும் பணத்தையும் நிறுத்திவிடுவார்கள். பிறகு நீ திண்டாடவேண்டியதுதான்.

தினகரம்:—நான் ஏன் திண்டாடவேண்டும். இந்நகரில் எத்தனையோ ஏஜண்டுகள் கடன் வாங்கிக் கொடுக்கத் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். எப்படி இருந்தாலும் இன்னும் சொற்ப காலத்துக்குள் எனக்கு ஆஸ்தி கிடைக்கப்போகிறது. அந்த தைரியத்தின் மீது எனக்கு வேண்டிய மட்டும் கடன் கொடுப்பார்களல்லவா?

ஹேமவதி:—அடே போக்கிரிப் பயலே! உன் பேச்சைக் கேட்கும்போதே எனக்கு எவ்வளவு ஆத்திரமாய் இருக்கிறது தெரியுமா? என் பேச்சைச் சிறிதும் கேளாமல் கடைசி

வரையிலும் உன் இஷ்டப்படியே திரிவதென முடிவு செய்திருக்கின்ருயா!

தினகரம்:—தாயே! நான் இந்த அறையில் நுழைந்த போதே, நான் சமாதான புத்தியுடனேயே இங்கே வந்திருப்பதாகவும், ஏதேனும் தகராறு ஏற்பட்டால் அதைத் தூண்டியதற்கு நீயே காரணமாவாய் என்றும் தெரிவித்திருக்கிறேனல்லவா?

ஹேமவதி:—தகாரு? தகாறு என்ன? ஒரு தாய்க்கும் பிள்ளைக்கும் தகராறு என்ன? தாய் கட்டளையிடுகிருள். குமாரன் அதன்படி நடக்கிருன். இவ்வளவு தானே! நீ தகாறு என்று சொல்வது எனக்கு ஆச்சர்யமாக அல்லவோ இருக்கிறது.

தினகரம்:—நீ அப்படி நினைத்துக்கொண்டிருக்கிருய். ஆனுல் நான் வேறுவிதமாக அல்லவோ நினைக்கிறேன். ஆஸ்தி பாஸ்தி இல்லாதவனல்லவோ தாய்க்கும் மற்றவர்களுக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். எனக்கென்ன தலைவிதியா?

ஹேமவதி:—அடா பாவி! நீ மிகக் கெட்ட புத்தியுடையவனுய்விட்டாய். நீ குழந்தையாயிருந்தபோது உனக்காக நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறேன் என்பதையும், எவ்வளவு செய்திருக்கிறேன் என்பதையும் அறிந்திருந்தால் இப்படிச் செய்வாயா? அதை அறிந்துகொண்டு பாராட்டக்கூடிய சுபாவம் உனக்கில்லை.

தினகரம்:—ஓ! அது ஒரு பழைய கதை. எப்போதோ நான் சிறு குழந்தையாயிருந்தபோது என்னை யாரோ தூக்கிக்கொண்டு போய்விட்டதில் நீ மீண்டும் என்னைக் கண்டுபிடித்து உன்னிடம் சேர்ப்பித்துக் கொண்டதை அடிக்கடி என்னிடம் சொல்லிக் காட்டவேண்டுமா?

ஹேமவதி:—(கண்களில் நீர் ததும்ப) தினகரா! தினகரா! இப்படி என்னைக் கேவலம் செய்யாதே. இன்னும் சிறிது மரியாதையாகவும், கௌரவமாகவும், அன்புடனும் நடந்துகொள். நான் உனக்காக எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறேன் என்பதை நீ உணர்ந்தால் என்னை இப்படி நடத்தமாட்டாய் என்பது நிச்சயம். உன் நடத்தை இயற்கைக்கு விரோதமானதாயும் அக்கிரமமானதாயும் இருக்கிறது. சிந்தித்துப் பார்த்து யோசனை செய்து நல்ல வழிக்கு வா.

தினகரம்:—அப்படியானல் என் இஷ்டப்படி என்னை விட்டுவிடு. நான் உன்னிடம் மரியாதையுடனும் அன்புடனும் நடந்துகொள்கிறேன். என் விஷயத்தில் நீ குறுக்கிட்டால்தான் எனக்குக் கோபம் வருகிறது.

ஹேமவதி:—ஓ! நீ சிறிதும் இரக்கமற்றவன். கல் நெஞ்சையுடையவன். இனி நான் என்னை மரியாதையாக நடத்தும்படி உன்னைக் கேட்டுக்கொள்ளமாட்டேன். உன்னைக் கேட்டுக்கொள்வதைவிட எனக்குள்ள அதிகாரத்தால் உனக்குக் கட்டளையிட்டு என் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முயற்சி செய்வேன்.

தினகரம்:—சரி! அப்படியே செய். நம் இருவரிடையே சண்டையே நடப்பதாக வைத்துக்கொள்வோம். இதில் யார் வெற்றியடையப் போகிறார் என்பதையும் பார்ப்போம்.

என்று இவ்வாறு கூறிக்கொண்டே அசட்டுச் சிரிப்புடன் தினகரன் அவ்வறையைவிட்டு வெளியே போய்விட்டான். தாயினிடமும் சொல்லவில்லை. அறையின் கதவையும் மூடிவிட்டுச் சென்றான். உடனே ஹேமவதியின் முகத்தில் பயங்கரமான தோற்றம் உண்டாயிற்று. 'என்னையே கொட்டக்கூடிய ஒரு தேளை நான் என் வயிற்றில் பெற்றெ

டுத்திருக்கிறேன். சீ! அவனை நான் வெறுக்கிறேன்' என்று உரக்கக் கத்தினள். பிறகு அவள் கத்துவதை நிறுத்திவிட்டு அவ்வறையின் பின் பக்கத்திலுள்ள கதவைக் கவனித்தாள். ஏனெனில் அக்கதவுக் கப்பாலிருந்து யாரோ குசுகுசுவென்று பேசும் சத்தம் அவளுக்குக் கேட்டது. ஆகவே அவள் திடீரென்று எழுந்து சென்று யாரும் எதிர்பாராத வகையில் அக்கதவைத் திறந்தாள். அங்கே தன்னுடைய இரு குமாரிகளும், கதவின் பின் பக்கமாக நின்று ஒத்துக் கேட்டுக் கொண்டிருந்ததை அறிந்தாள். அந்த அறையில் அவ்வேளையில் அப்பெண்கள் இருப்பது சகஜமில்லை யாதலால் ஹேமவதி தன் குமாரனுடன் அதன் அடுத்த அறையில் தாராளமாகப் பேசிக்கொண்டிருந்தாள். பக்கத்து அறையில் இவ்வாறு பெண்கள் இருப்பார்களென்று அவள் கனவிலும் கருதவில்லை. ஆகவே அவர்களை இங்கே கண்டதும் அவர்கள் வேண்டுமென்றே தாய்க்கும் மகனுக்கும் நடக்கும் சம்பாஷணையை உற்றுக் கேட்கவே வந்திருக்கிறார்களென்று அவள் நிச்சயித்துக்கொண்டாள். ஆதலின் அவளுக்குக் கோபம் அதிகரித்துவிடவே குமாரிகளைக் கண்டு, "இதென்ன அக்கிரமம்! போக்கிரியும், அடங்காதவனுமான ஒரு பிள்ளையைப் பெற்றிருப்பது எனக்குப் போதாதா? பெண்களுமா இப்படி மறைவில் நின்று தாய் என்ன செய்கிறாள் என்பது பற்றிக் காவல் காக்கவேண்டும்? பேஷ்! என் பிழைப்பு நல்ல பிழைப்புதான்" என்று கூறினாள்.

இதனால் துக்கமடைந்த இரு பெண்களும் கண்ணீர் விட்டுக்கொண்டே, "தாயே! எங்கள் மீது கோபிக்கவேண்டாம். நாங்கள் வேண்டுமென்றே இங்கே வரவில்லை. தற்செயலாக இங்கு வர நேர்ந்ததற்கு எங்கள் மீது பழியும் ஏற்பட்டுவிட்டது. சங்கீதமும், சித்திரமும் படித்து முடிந்து

போனதால், இங்குள்ள படத்தைப் பார்த்து ஊசி வேலை செய்யலாமென இங்கே வந்தோம். வந்த இடத்தில் பக்கத்து அறையில் பெரிய பதங்கள் உபயோகிக்கப்படுவது எங்கள் காதில் கேட்டது. சத்தம் தினகானுடைய குரல்போல் இருந்ததால் என்ன விஷயமென்று கவனித்தோம். அதில் ஏதேனும் குற்றமிருப்பதாக நாங்கள் நினைக்கவில்லை. உண்மையில் நடந்த விஷயம் இதுதான்,'' என்று தெரிவித்துக் கொண்டார்கள். அவ்விருவரில் மூத்தவளான ராஜேஸ்வரி தாயைப்போலவே உருவத்திலும் குணத்திலும் இருப்பாள். சிறிது அகம்பாவ குணமுடையவள். ஆனால் இளையவளான கற்பகம் மூத்தவளைவிட அழகிலும் குணத்திலும் சிறந்தவள். ஹேமவதி இவ்வாறு கேட்டதற்கு அடக்கத்துடன் பதில் அளித்தவள் கற்பகந்தான்.

186567

தாயார் கற்பகத்தைப் பார்த்து, 'சரி! நீங்கள் கேட்டுக் கொண்டிருந்த விஷயந்தான் என்ன? காதில் விழுந்த சங்கதியைச் சொல்' என்று கேட்டாள். அதற்குக் கற்பகம், 'தாயே! நீ தினகானிடம் உன்னை அன்புடனும் மரியாதையுடனும் நடத்தும்படி கேட்டுக்கொண்டிருந்தாய். என் தம்பியை நீ இவ்வாறு கேட்டுக்கொண்டது எனக்கு வருத்தத்தையே அளித்தது' என்று தெரிவித்தாள். அதைக் கேட்ட ஹேமவதி, 'ஓ! அப்படியானால், உங்கள் தாயார் எவ்வளவு கேவலமாக நடத்தப்படுகிறாள் என்பதை நீங்கள் அறிந்து கொண்டு விட்டீர்கள்போலும்!' என்று கூறினாள். ஆத்திரத்தாலும் கோபத்தாலும் அவளது தேகம் முழுதும் உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரை நடுநடுங்கியது. இதைக்கண்ட கற்பகம் மன இரக்கத்துடனும் அச்சத்துடனும், 'தாயே நாங்கள் செய்துவிட்டது அவ்வளவுபெரிய மன்னிக்க முடியாத குற்றமா?' என்று கேட்டுக்கொண்டே மற்றொருபக்க

மாகத் திரும்பி நின்றாள். கற்பகமும் ஹேமவதியும் பேசிக் கொண்டிருந்தபோது அதில் சற்றும் சம்பந்தப்படாதவள் போல் சிறிது தூரத்தில் விலகி நின்றிருந்த ராஜேஸ்வரியைப் பார்த்து, ஹேமவதி, 'ராஜேஸ்வரி, இங்கே வா. ஏன் நீ அங்கு நின்றுகொண்டிருக்கிறாய்? இதுவரை நாங்கள் பேசிக் கொண்டிருந்ததில் நீ சம்பந்தப்பட்டவளில்லையா?' என்று கேட்டாள்.

அதற்கு ராஜேஸ்வரி, 'நாங்கள் செய்தது குற்றமேயல்ல. அப்படி குற்றமென்று வைத்துக்கொண்டாலும் அது மிக மிக அற்பமான குற்றமாகும். அதற்காக நீ அநாவசியமாக எங்களைக் குறை கூறிக்கொண்டிருக்கிறாய். ஆதலால்தான் நான் அருகிலும் வரவில்லை' என்று கூறிக்கொண்டே தாயின் அருகில் சென்றாள். அப்போது ஹேமவதி, 'பணிவு இல்லாத மக்களைப் பெறுவதைவிட வேறு துக்கம் தாய்க்கு என்னவேண்டும்?' என்று கூறிவிட்டுத் தன் அழகிய இளைய குமாரியை நோக்கி, 'கற்பகம்! நீமட்டும் இப்போது நடந்துவிட்ட காரியத்துக்காகச் சிறிது வருத்தம் தெரிவிக்கிறாய். நீதான் என்னைச் சிறிது மரியாதையாகவும் கௌரவமாகவும் நடத்துகிறாய்' என்று சொல்லிக்கொண்டே தன் மூத்த குமாரியாகிய ராஜேஸ்வரியை நோக்கி, 'ராஜேஸ்வரி! நீ போக்கிரிப் பயலான உன் தம்பியைப்போலவே பணிவில்லாதவளாக இருக்கிறாய். எப்படியிருப்பினும் உங்களுக்கெல்லாம் ஒரு சங்கதி ஞாபகமிருக்கட்டும். அதாவது நான் இந்த வீட்டுக்கு எஜமானியாக இருப்பதுடன் உங்கள் தாயாகவும் இருக்கிறேன். ஆதலின் நீங்கள் என்னையே நம்பி யிருக்கவேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். எனவே என்னிடம் நடந்துகொள்ளும் விஷயத்தில் நீங்கள் ஜாக்கிரதையாக நடந்துகொள்

ளவேண்டும் என்பதே என் அபிப்பிராயம்' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள்.

இதைக்கேட்ட ராஜேஸ்வரி, 'தாயே! இப்போது நீ பேசிய சொற்களைப் பார்த்தால் நான் ஏதோ அபாரமான குற்றத்தைச் செய்துவிட்டதாகத்தானே பிறர் கருதுவார்கள்' என்று ஆத்திரத்துடன் பதில் அளித்தாள். அப்போது அவளது கண்களில் தீப்பொறி பறந்ததென்றே கூறவேண்டும். அதைக் கண்ட ஹேமவதி, 'என்ன! அறிவில்லாத பெண்ணே! எனக்கு ஆத்திரம் அதிகரிக்கும்படி நடந்துகொள்ளுகிறாய் என்பது உனக்குத் தெரியவில்லையா?' என்று கேட்டாள். அப்போது அந்த அறையின் கதவு திடீரென்று திறக்கப்பட்டது. உடனே சுமார் ஐம்பது வயதுள்ள ஒரு மாது அவ்வறையில் புகுந்து உரத்த குரலில், 'இனி இத் தொல்லை பொறுக்க முடியாது. யாரால் இப்படி அவமானப்பட முடியும். ஏதாவது ஒரு விதமாக நீங்கள் இதைத் தீர்த்துவிடவேண்டும். ஹேமவதி சீமாட்டியே! நீதான் என்னை இத்தொல்லையினின்றும் தவிர்க்கவேண்டும்' என்று முறையிட்டாள். அதைக்கேட்ட ஹேமவதி சீமாட்டி, 'என்னடீ இது மந்தரை! ஏன் இப்படி ஓவென்று அலறுகிறாய். நீ கூறுவதன் அர்த்தமொன்றும் எனக்குத் தெரியவில்லையே. உன்னை யார் அவமானப்படுத்தியது? அமைதியாக இரு. அவசரப்படவேண்டாம். உன்னை யாரேனும் அவமானப்படுத்தினால் அதை நான் பொறுத்துக்கொண்டிருப்பேனா?' என்று சமாதானப்படுத்தினாள்.

அப்போது மந்தரை ஹேமவதியின் அருகில் வந்து அங்குள்ள அனைவரின்மீதும், எல்லாவற்றின்மீதும் கோபித்துக்கொண்டவள்போல், 'அடிக்கடி இப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறது. அவன் எப்போதும் என்னை அவமானப்படுத்

அவதுடன் வெறுக்கிறான். நீ என்னைப் பிரீதியுடன் நடத்துவதினால் அவனுக்கு என்னைக் கண்டால் சிறிதும் பிடிப்பதில்லை. இப்போதும் மாடியின் படிக்கட்டில் அவன் என்னைச் சந்தித்தான். என்னால் அவசரமாக நடந்து அவன் எதிரில் இருப்பதினின்றும் விலக முடியவில்லை. அதற்காக அவன் கிழப்பிணமே என்று திட்டினான். அவனுக்கு நான் பாடம் கற்பிக்காமற் போகிறேனா? அவன் எனக்கு மரியாதை செய்யவேண்டாமா?' என்று சரமாரியாகப் பல வார்த்தைகளை மேலும் பேசித் தீர்த்தாள்.

அதைக்கேட்ட ஹேமவதி, 'மந்தரை! நீ என்ன பேசுகிறாய் என்பதை சிந்தித்துப் பார். அவன் பையனாயினும் இவ்வீட்டுக்கு எஜமானனாகப் போகிறவனல்லவா? நீ அவனை அவ்வளவு அலட்சியமாகப் பேசிவிடக்கூடாது,' என்று கூறினாள். அதே சமயத்தில் ராஜேஸ்வரி தன் தாயினிடம், 'அம்மா! இந்த மாதின் நடத்தை மிக்க அருவருக்கத் தக்கதாய் இருக்கிறது. ஒரு சிறிது பிழைக்காக நீ இதுவரை என்னையும் கற்பகத்தையும் கண்டித்தாய். ஆனால் நம்மை அண்டியிருக்கும் இந்த மாது இவ்வளவு தூரம் பேசியும் நீ ஆத்திரப்படாமல் இருக்கிறாய்' என்று கூறினாள். அதைக் கேட்டுக்கொண்டிருந்த மந்தரை மிக்க ஆத்திரத்துடன் ராஜேஸ்வரியை விரைத்துப் பார்த்தவண்ணம், 'ஆம்; நான் உங்களை அண்டியிருப்பவள்தான். அதற்காக நீ இவ்வாறெல்லாம் என்னைக் கேவலமாகப் பேசிவிடுவதா? நீ தூர் அகங்காரம் பிடித்த சிறுக்கியாய் இருக்கிறாய்? உன் தம்பிதான் போக்கிரி என்றால் நீ அதற்குமேல் இருக்கிறாயே' என்று பலவாறு பேசிவிட்டாள்.

அப்போதும் ஹேமவதி சீமாட்டி மந்தரையைப் பலமாகக் கண்டிக்காமல், 'மந்தரை! அதிகம் பேசவேண்டாமென்று

நான் எவ்வளவு முறை கூறுவது?' என்று கேட்டுக்கொண்டே தன் இரு குமாரிகளையும் நோக்கி, 'பெண்களே! நான் இம் மாதுடன் பிரத்யேக விஷயங்களைப் பேசவேண்டுமாதலின் நீங்கள் இங்கிருந்து விலகிச் செல்லுங்கள்' என்று கூறினாள். அப்போது மந்தரை இன்னும் உரத்த குரலில், 'பிரத்யேகமாக என்ன பேசுவது? அதெல்லாம் எனக்கு ஒன்றும் வேண்டாம். நான் வேண்டுவது நியாயமே. அப்பையனிடமிருந்து அவமானப்படுவதை இனி நான் பொறுக்க முடியாது. நான் அவனை வெறுக்கிறேன். நான்மட்டுமா? வீட்டில் எல்லாருமே அவனை வெறுக்கிறார்கள்,' என்று கூத்குரலிட்டாள். அப்போது ராஜேஸ்வரி அடக்கமுடியாத ஆத்திரமுடையவளாய், 'தாயே! இம்மாதை இங்கிருந்து துரத்த நீ சேவகர்களைக் கூப்பிடாவிட்டால்—' என்று ஏதோ சொல்லப்போனாள். இதற்குள் ஹேமவதி சீமாட்டி, 'வாயை மூடு-பேசாதே. உன்னை இங்கிருந்து போகும்படி நான் கட்டளையிடவில்லையா?' என்று கூறிக்கொண்டே கோப மிகுதியால் தன் காலால் பூமியில் அறைந்தாள்.

இளைய குமாரியான கற்பகம் அவ்வறையினின்றும் வெளியே செல்வதற்காக வாயிற்படியின் அருகில் சென்றுவிட்டிருந்தாள். ஆகவே இருவருமாகத் தங்கள் தாயார் செய்யும் அட்டகாசத்தைப் பார்த்துக்கொண்டே ஆச்சர்யமடைந்த வண்ணம் வெளியே சென்றனர். ராஜேஸ்வரி வெளியில் போகும்போது மந்தரையை மிக்க ஆத்திரத்துடன் பார்த்துவிட்டுப் போனாள். பிறகு அவ்வறையில் என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியாது. ஹேமவதி சீமாட்டியும் மந்தரையும் அங்கு சுமார் அரைமணி நேரம் வரை தனியாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு மந்தரை வெளியில் வந்தபோது பார்த்தால், அவள் பூரண திருப்தியடையாவிட்டா

லும் ஏதோ ஒருவிதமான சமாதானத்தை யடைந்தவள்போல் காணப்பட்டாள். அவள் உள்ளத்தில் வெறுப்பும் ஆத்திரமும் இன்னும் பொங்கிக்கொண்டிருந்ததும் அவளது முகக் குறியால் காணப்பட்டது.

இதற்கிடையில் அவ்வறையினின்றும் வெளியேசென்ற சகோதரிகளிருவரும் தங்கள் அறைக்குச் செல்வதற்காக மாடி மீது ஏறிக்கொண்டிருக்கையில் வழியில் படிக்கட்டுகளில் அவ் வீட்டில் வேலை செய்துகொண்டிருந்த வாலிபன் ஒருவனைச் சந்தித்தார்கள். அவனைப்பற்றிச் சிறிது இங்கு விவரிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. அவன் சுமார் பதினெட்டு வயதுடையவனுயும், மிக்க அழகானவனுயும் இருந்தான். அவன் அதிக உயரமாக இல்லாதவனுயும் நல்ல தேகக் கட்டுடையவனுயும் மற்றும் மிக்க ரூபலாவண்ய முள்ளவனுயும் இருந்தான். அவனது ஒவ்வொரு அங்கமும் வருணனைக் குரியதாகவே இருந்தது. ஆனல் மிக்க எளிய உடையை அணிந்திருந்தான். அவன் முகத்தில் பெருந்தன்மையும் பிரகாசித்தது. ஆகவே அவனைக் காணும் எவரும் அவனைப்பற்றிக் கவனிக்காமலிருக்க முடியாது. அவனுடைய பெயர் மோகன சுந்தரம். ஆனல் அவனை அவ்வீட்டில் அனைவரும் மோகனம் என்று கூப்பிடுவது வழக்கம். அவன் ஒரு வருஷ காலமாக ஹேமவதி சீமாட்டியின் மாளிகையில் வேலைபார்த்து வருகிறான்.

இந்த மோகன சுந்தரத்தைத்தான் சகோதரிகளிருவரும் படிக்கட்டில் சந்தித்தார்கள். இளையவளான கற்பகம் மட்டும் அவனைப் பார்த்தபோது சாதாரணமாக ஒரு வேலைக்காரனை அந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் எப்படிக் கருதுவார்களோ அப்படியே நினைத்துச் சென்றாள். ஆனல் மூத்தவளான ராஜேஸ்வரிமட்டும் அவனை அத்தகைய எண்ணத்துடன் பார்க்

காமல் நல்ல யௌவனம் வாய்ந்த பெண், தன் வயதைப் போன்ற வயதுடைய ஒரு வாலிபனை எப்படிக் கவனிப்பாளோ அவ்வாறு தன் பார்வையை முழுச் சக்தியுடன் அவன்மீது செலுத்திக் கவனித்தாள். அவனும் இதைக் கவனித்தானென்றாலும் திரும்பிப் பாராமல் சரசரவென்று கீழே இறங்கிப்போய்விட்டான்.

பிறகு சகோதரிகளிருவரும் மாடிமீதுள்ள தங்கள் அறைக்குச் சென்று சுமார் ஒருமணி நேரம் வரை பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு வேலைக்காரி அங்கே வந்து அவர்களுக்கு வர்ணந் தீட்டும் சித்திரத்தைக் கற்றுக் கொடுப்பதற்காக மோகனதாஸ் வந்து காத்துக்கொண்டிருப்பதாகத் தெரிவித்தாள்.

நேயர்காள்! பெரிய பணக்காரர்கள் எப்போதும் ஆனந்தமாகக் காலங் கழிக்கிறார்கள் என்று பலர் தவறாகக் கருதுவதுண்டு. ஏழைகளுக்குள்ள மன நிம்மதி பணக்காரர்களுக்கு இருப்பதில்லை என்பது அனுபவ பூர்வமாக ஏற்பட்ட உண்மையாகும். பெரிய இடங்களில் எத்தனையோ மர்மங்கள் நிகழ்வதைப்போல் சாதாரண இடங்களில் ஏற்படுவதில்லை. ஹேமவதி சீமாட்டி இவ்வளவு பணக்காரியாகவும், கிருஷ்ணகிரி ஜமீன்தாரிணியாயும் இருந்து அவள் கண்ட பலன் என்ன? குமாரன் தனக்கு அடங்கி நடப்பதில்லையே என்னும் பெருங் கவலையே எப்போதும் அவளை வாட்டிவந்தது. கேவலம் ஒரு வேலைக்காரியான மந்தரையிடம் அவள் என்ன காரணத்தாலோ அடங்கியிருந்தாள். மந்தரையை எதிர்த்துப் பேசும் சக்தி அவளுக்கிருக்கவில்லை. இம் மர்மங்கள் யாவும் போகப்போக வெளியாவதை நேயர்கள் பார்க்கலாம்.

## 8-வது அத்தியாயம்

### பாங்கிக்கார செல்வநாதர்.

நாம் மேலே விவரித்த விஷயம் நடந்த தினம் மாலை ஆறு மணிக்கு, சந்திரசேகரம் பிரபு தங்கியிருந்த மாளிகையின் கதவு தட்டப்பட்டது. அங்கு சந்திரசேகரனும் அவனது தோழன் தினகரனும் இருந்தார்கள். கதவு தட்டப்பட்ட சத்தம் கேட்டதும் அவர்களிருவரும் ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தார்கள். அப்போது தினகரன், 'ஓ! நாம் எதிர்பார்க்கும் கிழவன்தான் தடபுடலாக உடையை அணிந்துகொண்டுவந்திருக்கிறான்,' என்று பரிகாசத்துடன் கூறினான். அதைக் கேட்ட சந்திரசேகரன், 'என் வேலைக்காரன் ஆறுமுகம் அவனைக் கண்டு சிரிக்காமலிருக்கவேண்டுமே என்று பிரார்த்திக்கிறேன். அவன் அவ்வளவு முட்டாள் அல்ல. எல்லாரிடமும் பக்குவமாக நடந்துகொள்வான். அக்கிழவன் வண்டிக்காரனுடன் ஏதோ சண்டை போடுகிறான். வாடகை தகராறு ஏற்பட்டிருக்கிறது போலும். கேவலம் இதற்காக இவ்வளவு சண்டை இடுவதா? இந்த வீட்டுக்காரர்களும் அக்கம் பக்கத்திலிருப்பவர்களும் என்ன நினைப்பார்கள்?' என்று சொல்லிக்கொண்டான். இதற்குள் வெளியில் செல்வநாதருக்கும் வண்டிக்காரனுக்கும் சண்டை வலுத்துவிட்டதால் அதிக ஜனங்கள் கூடிவிட்டார்கள். வண்டிக்காரன் எவ்வளவோ அட்டகாசமாகச் சண்டை போட்டான். ஆயினும் செல்வநாதர் பொறுமையை இழந்துவிடாமலும், அச்சமடைந்துவிடாமலும் நிதானமாக அவனுடன் பேசி அவனுக்குக் கொடுக்கவேண்

டிய கட்டணத்தை வண்டியின் மீது வைத்துவிட்டு எதிரில் இருந்த வீட்டில் நுழைந்துவிட்டார். இவ்விடத்தில் நாம் ஒன்றுதான் கூறமுடியும். அதாவது இரத்தினபுரியைப் போன்ற நகரங்களில் வண்டிக்காரர்களும் வாயாடிகளாயும் பொய்யர்களாயும், வேண்டுமென்றே சண்டை இடுபவர்களா யும் இருக்கிறார்கள். செல்வநாதர் போன்ற பணக்காரர் களும் சொற்ப தொகைக்காகக் கேவலம் பரம ஏழைகளான வண்டிக்காரர்களுடன் பந்தயம் போட்டுக்கொண்டு சண்டை இடுகின்றனர். ஆகவே இருதரப்பினர் மீதுமே குற்றம் சுமத்தவேண்டியதாக இருக்கிறது.

வீட்டு வாயிலில் காத்துக்கொண்டிருந்த ஆறுமுகம் செல்வநாதரை மாடிமீது அழைத்துச் சென்றான். அங்கு அவரை சந்திரசேகரன் மரியாதையுடன் வரவேற்றான். ஆனால் தினகரன் மட்டும் அவன் விஷயத்தில் அலட்சியமாகவே இருந்தான். அப்போது செல்வநாதர் அவ்விரு பிரபுக்களுக் கும் முறைப்படி மரியாதை செலுத்திவிட்டு, 'நான் முதலில் நினைத்தபடி மோட்டார் பஸ்ஸில் ஏறி வராமற்போனதற்காக வருத்தப்படுகிறேன். இந்நகரத்தில் வண்டிக்காரர்களுடைய போக்கிரித்தனம் பொறுக்க முடியாததாக இருக்கிறது. இதை நீங்கள் கவனிக்கவில்லையா?' என்று கேட்டான். அதற்கு சந்திரசேகரன், 'ஐயா, செல்வநாதரே! ஆம். வண் டிக்காரர்கள் வாயாடிகளே. நான் அவர்களுடன் எத்தகைய சம்பந்தமும் வைத்துக்கொள்ளும் வழக்கமில்லை,' என்று சமா தானம் கூறினான். வண்டிச் சத்தம் கொடுக்கும் விஷயத் தில் செல்வநாதர் சிறிது தாராளமாக நடந்துகொள்ளவில்லை யென்பதில் அவ்விரு வாலிபர்களுக்கும் வெறுப்பு இருந்த தென்றாலும் அவர்கள் அதைக் காட்டிக்கொள்ளவில்லை. ஏனெனின், எப்படியாவது செல்வநாதரை அவர்கள் தங்க

ளுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நினைத்திருந்ததால் அவரை எதிர்த்துப் பேச அவர்கள் விரும்பவில்லை.

அச்சமயத்தில் செல்வநாதர் தன் சட்டைப் பையிலிருந்து பழைய காலத்திய பெரிய தங்கக் கடிகாரத்தை எடுத்து மணி பார்த்துக்கொண்டே, 'நான் குறித்த காலத்திற்குச் சரியாக வந்துவிட்டேன் அல்லவா? எனக்குப் பசியும் அதிகமாக இருக்கிறது. பகலில் எப்போதோ சிறிது தேயிலைப்பானம் செய்ததுதான்,' என்று தெரிவித்தார். அதற்கு சந்திரசேகரன், 'ஐயா, பெரியாரே! இதோ விரைவில் ஆகாரம் கொண்டுவரப்படும். நிதானமாக உட்காருங்கள். இன்று முழுதும் நகரில் தாங்கள் அதிக வேலையாய் இருந்தீர்களோ?' என்று மரியாதையாக உபசரித்தான்.

செல்வநாதர்:—ஆம்; அதிக வேலைதான். நானும் என்னுடைய வக்கீலுமாகச் சேர்ந்து இன்று பல வேலைகளைக் கவனித்தோம். என் வக்கீலையும் இங்கே அழைத்துவந்திருப்பேன். ஆனல் மரியாதைக் குறைவாக இருக்குமே என்று அவ்வாறு செய்யவில்லை.

சந்திரசேகரன்:—தங்களுக்காகவேனும் நான் தங்கள் வக்கீலையும் வரவேற்று உபசரிக்கமாட்டேனா? தாங்கள் அவரையும் அழைத்துவந்திருக்கலாம்.

செல்வநாதர்:—சரி; அது கிடக்கட்டும். நான் என் வரலாற்றைச் சிறிது கூறுகிறேன் கேளுங்கள். எனது தந்தை பூட்ஸ் தைப்பவராக இருந்தார். என் தாயாரோ மற்ற பணக்காரர் வீட்டுத் துணிகளைத் தோய்த்துக் கொடுத்துவந்தாள். இப்படி யெல்லாம் அவர்கள் கஷ்டப்பட்டு பணம் சம்பாதித்தார்கள். நானும் ஒரு தர்ம பாடசாலையில் படித்தேன்,

பிறகு சிறு வேலைக்காரப் பையன் வேலை முதல் செய்து என் வாழ்க்கையில் பெரிய போராட்டத்தை நடத்தி இப்போது நீங்கள் பார்க்கும் இந்த அந்தஸ்துக்கு வந்திருக்கிறேன்.

இச்சரிதையைக் கேட்ட அவர்களிருவரும் திக்பிரமையடைந்தார்கள். ஆச்சர்யப்பட்டனர். பிரபுக்கள் குலத்திலேயே பிறந்து வளர்ந்த அவர்களுக்குச் செல்வநாதரின் சரித்திரம் திடுக்கிடச் செய்ததில் ஆச்சர்யமொன்றுமில்லை. ஆனால் அவர்கள் உள்ளத்தில் இப்படிப்பட்ட கிளர்ச்சியொன்று ஏற்பட்டிருக்கிறதென்பதைச் செல்வநாதர் அறியார். மிக மிக ஏழையாக இருந்த தான் தன் சொந்த முயற்சியாலும் உழைப்பாலும் இவ்வளவு நல்ல நிலைமைக்கு வந்தது பற்றிப் பெருமையாக அவர்கள் நினைக்கிறார்களெனக் கருதினார். இதற்குள் அம்மூவரும் உட்கார்ந்திருந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. பலவிதமான ஆகார வஸ்துக்களும், பானவகைகளும் அங்கிருந்த மேஜைகளின் மீது வைக்கப்பட்டன. அவரவரும் அவரவருடைய ஆசனத்தில் அமர்ந்து ஆகாரம் அருந்த ஆரம்பித்தனர். செல்வநாதருடைய பழைய சரித்திரத்தை யறிந்த அவ்விரு வாலிபர்களும், அவர் இப்படிப்பட்ட விருந்தில் கௌரவமாக விருந்துண்ணவேணும் தெரிந்துகொண்டிருக்கிறாரா என்று சந்தேகப்பட்டு அவர் இனி என்ன செய்யப் போகிறார் என்பதைப் பார்க்க ஆவலுடன் இருந்தனர். ஆனால் செல்வநாதர் தங்களைவிட இனிய முறையில் ஆகாரம் அருந்தியதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். ஒருவர் எப்படிப்பட்ட ஏழையேயாயினும் கல்வி இல்லாதவராயினும் அவருக்குச் செல்வம் வந்துவிட்டால் அவரும் சிறிது நல்ல இடத்தில் பழகினால் பரம்பரை செல்வர் போலவும் கல்வியாளர் போலவும் நடந்துகொள்ள எளிதில் முடிகிறது என்பதை உலக அனுபவம் சற்றுமில்லாத அவ்விரு

வாலிபர்கள் அறியமாட்டார்களல்லவா? செல்வநாதர் விருந்துண்ட முறையைக் கண்டு பணத்திமிர்பிடித்த அவ்வாலிபர்கள் அடங்கிவிட்டார்கள். செல்வநாதர் உலக அனுபவம் பூரணமாய் வாய்ந்தவர் என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

இவ்வாறாக அவர்கள் விருந்துண்ட பின்னர் அவர்கள் சிறிது நேரம் பின்வருமாறு பேசிக்கொண்டிருந்தார்கள்:—

சந்திர:—தாங்கள் நீண்டகாலம் இரத்தினபுரியில் தங்கியிருப்பதென நிச்சயித்திருக்கிறீர்களா?

செல்வநாதர்:—தற்காலிகமாக இங்கேயே நிரந்தரமாய் இருப்பதென உத்தேசித்திருக்கிறேன். உங்களுக்காக உங்கள் சிறிய தந்தை மனோகரம் பிரபு கொடுத்த கடிதத்தில் நான் என் தொழிலை நிறுத்தியிருப்பதாக அறிவித்திருக்கிறார் அல்லவா? ஆதலின் நான் இங்கேயே இருக்கவேண்டுமென்னும் எண்ணத்தால் எனக்கு ஒரு சிறிய ஜமீன் வாங்கும்படி என் வக்கீலிடம் கூடத் தெரிவித்திருக்கிறேன்.

சந்திர:—செல்வநாதரே! தாங்கள் செய்யும் வேலையைச் சிறிது யோசித்துச் செய்யுங்கள். ஜமீனை வாங்கும் முழுப் பொறுப்பையும் தங்கள் வக்கீலிடமே விட்டுவிட வேண்டாம். அவர் வக்கீல் ஆதலால் சதா தங்களுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் தகராறு இருக்கிற ஜமீனை வாங்கிவிட்டுப் பிறகும் தங்கள் சார்பாக வழக்கு நடத்திக்கொண்டிருக்க முயற்சி செய்வார். மேலும் நல்ல மாதிரியான ஜமீனைப் பார்த்து வாங்க அவருக்குத் தெரியாமலும் இருக்கலாம். நல்ல மாசூல் தரத்தக்க தோட்டம் முதலியன இல்லாமல் செங்கல்களை அறுத்து சூளை போடக்கூடிய நிலமாகப் பார்த்து வாங்கிவிடுவார். அப்போதுதான் நீங்கள் வீடுகளைக் கட்டிப் பலருக்கும் வாட

கைக்கு விடுவீர்கள். அந்த வகையிலும் வழக்குகள் ஏற்பட்டால் தான் கவனித்துக் கொள்ளலாம் என நினைப்பார். இவைகளெல்லாம் வக்கீல்களின் சுபாவம். ஆதலின் விஷயத்தைத் தங்களுக்குத் தெரிவித்தேன்.

செல்வநாதர்:—அப்படியானல் பிரபுக்களாகிய நீங்கள் சொல்லும் யோசனைதான் என்ன? உங்கள் யோசனைப் படியே நடக்கிறேன்.

சந்திரசேகரன்:—:—ஏன்! எனது மரியாதைக்கும் அன்புக்கு முரிய மனோகரம் பிரபு உங்கள் விஷயத்தில் கவனம் செலுத்தும்படி எழுதி யிருப்பதால் உங்களுக்காக என்னுல் இயன்றதைச் செய்யத் தயாராக இருக்கிறேன்.

செல்வநாதர்:—ஓ, அப்படியானல் எனக்கு ஒரு ஜமீனை வாங்கிக் கொடுப்பதில் நீங்கள் உங்கள் கவனம் முழுதையும் செலுத்துவீர் என்று நம்புகிறேன்.

சந்திர:—ஆஹா! அதில் என்ன சந்தேகம்! உங்கள் வேலையைக் கவனிப்பதில் எனக்குச் சந்தோஷ மதிகமாயிற்றே. என் அப்பானத்தைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அருந்தி விடுவதுதானே.

செல்வ:—உங்களுக்கு அனேக வந்தனம். எனக்கு இரண்டொரு தினங்களாகவே தேக சுகமில்லை. உண்மைக் காரணம் என்ன வென்றல் எனக்கு இந்நகரத்தின் மதுபான வகை உடம்புக்கு ஒத்துக் கொள்ளவில்லை. இதுவரை நீங்கள் அளித்ததைக் குடித்ததிலேயே எனக்கு மயக்கமாய் இருக்கிறது.

சந்திர:—அது ஒன்றும் செய்யாது. தாராளமாகச் சாப்பிடுங்கள்.

தினகரன்:—என்ன ஐயா, பெரியாரே! அது என்ன செய்யப்போகிறது. நான் எவ்வளவு அதிகமான மதுபான வகை இருந்தாலும் லட்சியமில்லாமல் குடித்து விடுவேன். அதனால் எனக்கொன்றும் உண்டாகாது.

செல்வநாதர்:—உங்களுக்கு இவ்விஷயத்தில் அனுபவம் அதிகம் போலும்! தினகரம் பிரபுவே! உமக்கு இப்போது என்ன வயது? முப்பது, முப்பத்தைந்து இருக்குமா?

தினகரன்:—ஐயோ, முப்பதா! எனக்கு இப்போது பத்தொன்பது வயதுதான் ஆகிறது. ஆனால் இதற்குள் நான் இவ்வுலகவாழ்க்கையில் சிறிது அதிதமாகவே ஆடி விட்டேன். இதனால் என்னைப் பார்க்கும்போது சிறிது வயது அதிகமானவனைப்போல் தோன்றுகிறது.

செல்வ:—(மதுபானத்தை அருந்திக்கொண்டே) நான் இந்நகரில் சௌகரியமாகத் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய நீங்கள் முன் வந்ததற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். நான் என்ன செய்யவேண்டுமென்பது பற்றி உபாயமாக ஒரு திட்டத்தைக் குறிப்பிடுங்கள் பார்ப்போம். நீங்கள் சொல்வதையெல்லாம் நான் அனுஷ்டிக்காவிட்டாலும் நீங்கள் கூறும் யோசனை சிறிதேனும் எனக்குப் பயன்படுமல்லவா?

சந்திர:—முதலில் நான் உங்களுடைய சரியான நிலைமையை அறிந்து கொள்ளவேண்டும். நீங்கள் மிகப் பெரிய செல்வந்தர் என்பதை நாங்கள் அறிந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் விவாகமானவரா? எவ்வளவு குழந்தைகள் இருக்கின்றன?

செல்வ:—என் மனைவி இறந்து விட்டாள். என் குமாரர்களெல்லாம் பெரியவர்களாய் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலில் இருக்கிறார்கள். இப்போது நான் தனியாகவே

இருக்கிறேன். பிறரைப்பற்றி நான் கவலைப்பட வேண்டிய தில்லை.

சந்திர:—சரி! நிலைமை தெரிந்து விட்டது. இப்போது நீங்கள் முதலில் செய்ய வேண்டியது என்னவென்றால் அந்த மூலக்கொத்தளத்தைவிட்டு சைனுபஜாருக்கு வந்து விட வேண்டும். நீங்கள் இப்போது தங்கிய இடமே மிகக் கேவல மானது. அதைச் சொன்னாலே எங்களைப் போன்ற பிரபுக் கள் உங்களை மதிக்க மாட்டார்கள்.

செல்வ:—அப்படியல்ல. நீங்கள் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அங்கே நான் தங்கியிருக்கும் ஓட்டலில் திவ்யமான ஆகாரம் அளிக்கிறார்கள். உங்கள் இருவரையும் கூட ஒருநாள் அங்கே சாப்பாட்டுக்கு அழைத்துச் செல்வ தென்று யோசித்திருக்கிறேன்.

சந்திர:—எப்படியாயினும் சரி! நீங்கள் இனி நவீன முறையில் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டியவரா யிருப் பதால் நீங்கள் அவ்விடத்தை விட்டு வந்துவிடவேண்டும். நல்ல ஓட்டலில் தங்கி ஒரு சிறந்த புலியையும் தயாரித்துக் கொள்ளவேண்டும்.

செல்வ:—புலியா! எனக்குக் காட்டுமிருகங்கள் என் றாலே அச்சம் அதிகம். நமக்குப் புலி ஏன்? நீங்கள் பேசு வது ஆச்சரியமாக இருக்கிறதே.

சந்திர:—ஓ, நான் சொல்வது உமக்கு விளங்கவில்லை போலும்! புலி என்றால் அவ்வளவு கடுமையும் சுறுசுறுப்பு முள்ள வேலைக்காரனை நியமித்துக் கொள்ளல் என்று அர்த் தம். யௌவனமும் சாமர்த்தியமும் உள்ள ஒரு வேலைக் காரனையும் ஒரு வேலைக்காரியையும் வைத்துக்கொள்ள வேண் டும். பிறகு குதிரைகளை வாங்கும் விஷயத்தில் பொறுப்பை

என்னிடமும் தினகரம் பிரபுவினிடமும் விட்டுவிடுங்கள். மிகச் சிறந்த குதிரைகளை வாங்கி விடுகிறோம். இவ்வளவுதான் என்று நினைக்க வேண்டாம். நமது நகரிலுள்ள பிரபல சினிமா கொட்டகையாகிய கிரௌன் தியேட்டரில் முதல்தர ஆசனமொன்றை நிரந்தரமாகப் பதிவு செய்து கொண்டுவிட வேண்டும். இன்னும் நவீனமாக இருப்பதற்கு மற்றொரு விஷயத்தையும் நீங்கள் தயாரித்துக் கொள்ளவேண்டும்.

செல்வ:—மற்றொரு விஷயம் என்பது என்ன? அதை முதலில் தெரிவித்து விடுங்கள். அதை யறியவேண்டுமென்று மிக ஆவலாக இருக்கிறது.

சந்திர:—நீங்கள் தனியாக இருப்பது நியாயமா? இப்படிப்பட்ட நவீன நாகரிகம் முதிர்ந்த நகரில் தனியாக இருக்கலாமா? ஆதலின் ஒரு ஜோடியைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றுதான் கூறினேன்.

செல்வ:—ஓ, நீங்கள் அதையும் எனக்காகத் தேடிக் கொடுப்பீர்களா? எனக்கு வேண்டிய சௌகரியங்களை எற் படுத்திக் கொடுப்பதில் நீங்கள் மிக ஆவலுள்ளவர்களாயிருக் கிறீர்கள் என்று தெரிந்து சந்தோஷப் படுகிறேன். எனக்கும் இந்த மதுபானம் அருந்த அருந்த இவ்வுலகில் எல்லா இன் பங்களையும் அனுபவிக்க வேண்டுமென்றுதான் எண்ணம் உண்டாகிறது. ஒரு ஜோடியைத் தேடிக்கொடுத்தால் சந் தோஷமாகத்தா னிருக்கும்.

சந்திர:—நிச்சயமாக உங்களுக்கு வேண்டிய எல்லாச் சௌகரியங்களையும் செய்து கொடுப்போம். நான் மேலே சொன்னபடி சௌகரியங்களை அமைத்துக்கொண்டு நீங்கள் சைனுபஜாரில் இன்பமாகக் காலங்கழித்து வருகையில் நாங் கள் உங்களுக்காக நல்ல ஜமீன் ஒன்றைத் தேடி யலைவோம்.

அந்த ஜமீனில் நல்ல பங்களாவும், தோட்டங்களும், நந்த வனங்களும் மற்ற வசதிகளும் இருக்க வேண்டும். இது மாத்திரமா? நீங்கள் ஒரு கோர்ட்டில் ஜூரர் ஆகும் படியும், பிரபுப்பட்டம் பெற்று தேசத்தின் சட்டசபையில் உட்காரும் படியும் செய்வோம்.

செல்வ:—ஆ! நீங்கள் சொல்வதைப் பார்த்தால் என்னை இந்திரலோகத்தின் போகங்களை அனுபவிக்கும்படி செய்து விடுவீர்கள்போ லிருக்கிறது. பரம ஏழைகளாய் இவ்வுலகத்தை விட்டுச் சென்ற என் தந்தையும் தாயும் இப்போது தற்செயலாய் இவ்வுலகத்துக்குத் திரும்பி வந்து என் சுக போகங்களைக் கண்டால் பிரமித்துப் போவார்கள் என்றே நினைக்கிறேன்.

சந்திர:—ஆம்; தங்களுக்குப் பிரபுப் பட்டம் வேண்டியதுதான். நீங்கள் அதற்குத் தகுதியானவரே இவ்வளவு ஆஸ்தி உங்களுக்கு இருக்கும்போது அப்பட்டம் பெறும் விருப்பதா? எவ்வளவு ஆஸ்தி என்று சொன்னீர்கள்? மறந்துவிட்டது. மற்றொரு முறை சொல்லுங்கள்.

செல்வ:—என் ஆஸ்தி இவ்வளவு மதிப்புள்ள தென்று நான் இதுவரை உங்களிடம் சொல்லவில்லையே. இன்றுதான் நானும் எனது வக்கீலும் சேர்ந்து கணக்கு போட்டுப் பார்த்தோம். சுமார் ஐம்பது லட்சம் பவுன் இருக்கிறதெனத் தெரிந்தது.

சந்திர:—ஓ, அது ஒன்றும் குறைவான தொகையல்ல தங்கள் பெயரும் செல்வநாதர் என்று அழகானதாயிருக்கிறது. தினகரம் பிரபுவே! நீ இவரை உன் தாயாரிடமும் சகோதரிகளிடமும் அறிமுகம் செய்துவை.

தினகரன்:—அதிலென்ன ஆட்சேபம். அப்படியே செய்கிறேன். ஹேமவதி சீமாட்டியும் அவரைக் காண்பதில்

திருப்தியுடையவராகவே இருப்பார். (இவ்வாறு அவன் பகிரங்கமாகச் சொன்னுனென்றாலும் மிக்க அகம்பாவமும் தற்பெருமையும் உள்ள தன் தாயார் செல்வநாதரைக் கண்டு பரிகசிப்பாள் என்று நினைத்தான். மேலும் அன்று பகல் தான் அவன் தன் தாயுடன் மனஸ்தாபப்பட்டிருக்கிறுனல்லவா? எப்படி அறிமுகம் செய்துவைக்க முடியும். ஆயினும் மேலுக்காக அவன் ஏதோ உபசார வார்த்தை கூறிவிட்டான். இப்படித்தான் பலர் உள்ளொன்று இருக்க வெளியில் உபசாரத்துக்காக வேறுவிதமாக நடந்துகொள்வார்கள். அப்படிப்பட்டவர்களை நம்பலாகாது.)

செல்வநாதர்:—பிரபுக்களே! நீங்கள் இருவரும் என் பால் அளவுகடந்த விசுவாசத்துடன் நடத்துகொள்வதற்காக உங்களுக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுக்குப் பிரதியுபகாரமாக ஏதேனும் செய்தால்தான் என் மனம் திருப்தியடையும். (இவ்வாறு சொல்லும்போது செல்வநாதர் அளவுகடந்து மதுபானம் அருந்திவிட்டிருந்ததால் தான் சுவாதீனமற்றவராய் அருகிலிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்து புரண்டுகொண்டிருந்தார்.)

சந்திர:—செல்வநாதரே! நமக்குள் இவ்வளவு இனிய முறையில் ஆரம்பமான இந்த சினேகம் நீண்டகாலம் நீடித்திருக்கவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன். ஆனல் உங்களைப் பார்க்கும்போதே நீங்கள் மீண்டும் ஒரு முறை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று தோன்றுகிறது. உங்களைப் போன்ற சுறுசுறுப்பும், சந்தோஷமும், உற்சாகமும் உடைய ஒரு கனவான் விவாகமில்லாமலிருப்பதா?

செல்வ:—எனக்கு அறுபது வயதாகிவிட்டதே. இனிமேல் யார் பெண்ணைக் கொடுப்பார்கள்.

சந்திர:—சீ! நீங்கள் சொல்வது தவறு. உங்களுக்கு வயது நாற்பத்தைந்துதான் இருக்கும்.

செல்வ:—நீங்கள் சொல்வதேபோல நான் கூறுவது தவருகவும் இருக்கலாம். என் பெற்றேர்கள் நான் பிறந்த காலத்தைத் தவருகக் குறித்துவைத்துவிட்டார்கள்போலும் நான் நாளையதினம் இதைப்பற்றி ஜனன மாணக் குறிப்பு எழுதிவைக்கும் காரியாலயத்தில் சென்று விசாரிக்கிறேன். அது கிடக்கட்டும். என் விவாகத்தைப் பற்றி என்ன செய்யப்போகிறீர்கள். நீங்கள் எனக்குச் செய்து கொடுக்கும் பல சௌகரியங்களில் தக்க மனைவியைத் தேடிக் கொடுப்பதும் ஒன்ருகும். எனக்கேற்ற துணைவி அகப்படுவாளா?

சந்திர:—அவ்விஷயத்தில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. நான் ஒரு சீமாட்டியின் மீது கண்வைத்திருக்கிறேன். அவள் மறுத்துவிட்டாலும் சுமார் வருஷவாரி எண்ணுயிரம் பவுன் வரும்படியுள்ள மற்றெரு சீமாட்டி இருக்கிருள். யாரையாவது ஏற்பாடு செய்துவிடுகிறேன். அதைப் பற்றி உங்களுக்குக் கவலைவேண்டாம்.

செல்வ:—ஓ! அந்த இரு சீமாட்டிகளில் யாரேனும் ஒருத்தி எனக்கேற்றவளாகவே அமைவாளென்று நம்புகிறேன். ஆ! நீங்கள் எனக்குச் செய்யும் உபகாரம் என்றென்றும் மறக்க முடியாதது. உங்களை நான் அதிகம் பாராட்டுகின்றேன்.

சந்திர:—சரி; அவைகளைப் பற்றி இனி உங்களுக்குக் கவலை வேண்டாம். உங்களுடைய சௌகரியத்தைக் கவனிக்கவேண்டியது எங்கள் கடமையெனக் கொண்டுவிட்டோம். இப்போது எனக்கு ஏற்பட்டுள்ள ஒரு அசந்தர்ப்பம் என்னவென்ருல் ஐயாயிரம் பவுன் கடன் தாங்கமுடியாமல் அவஸ்தைப்படுகிறேன். அதனுல் மன நிம்மதியில்லாமல்

எந்தக் காரியத்தையும் செய்ய உற்சாகமில்லாமல் இருக்கி றது. நீங்கள் இப்போது உதவி செய்தால் இரண்டொரு மாதங்களில் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன். உங்கள் சௌ கரியம் எப்படியோ?

செல்வ:—ஓ! மிக்ச் சந்தோஷத்துடன் நான் உங்க ளுக்கு இந்த உதவியைச் செய்வேன். இதென்ன பிரமாதம்! எனக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ளும் உங்களுக்கு ஐயாயிரம் பவுன் கடன் கொடுப்பது ஒரு பெரிய காரியமா? எனக்கு நீங்கள் ஒரு மனைவியையும், ஒரு ஜோடியையும் கூடத் தேடிக் கொடுக்கப்போகிறீர்களே! பேனவை எடுத்து வாருங்கள்.

செல்வநாதர் இவ்வாறு சொல்லும்போது தலைகால் தெரியாமல் குடி மயக்கத்தில் விழுந்துகிடந்தார். அவர் பேசுவதும் செய்வதும் இன்னதென்றே அவருக்குத் தெரிய வில்லை. மேலும் பெண் என்றால் பேயும் இறங்குமல்லவா? ஒரு மனைவியைத் தேடிக் கொடுப்பதாகச் சொல்லிவிடவே அப்போதே அம்மனைவியை அணைத்துக் கொண்டதுபோல் அவர் புளகாங்கிதமடைந்து மதிமயங்கினார். அவரது இந் நிலைமையைக் கண்ட வாலிபர்களான பிரபுக்கள் இருவரும் கூத்தாடினார்கள். தாங்கள் நினைத்த காரியம் முடிந்துவிட்ட தென்று சந்தோஷப்பட்டார்கள். அவர் கேட்டபடியே பேனவைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். செல்வநாதரும் தன் சட்டைப் பையிலிருந்து செக் புஸ்தகத்தை எடுத்து அதன் ஒரு தாளில் ஐயாயிரம் பவுனுக்கு அனுமதி எழுதி னார். அதைக் கிழித்து சந்திரசேகரம் பிரபுவினிடம் கொடுத் தார். அவனும் மிக அலட்சியமாக அதை மடித்துத் தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான்.

சந்திர:—பெரியாரே! இப்போது நீங்கள் கொடுத்த இந்தத் தொகைக்கு ஒரு பாண்டு எழுதித்தரட்டுமா?

செல்வ:—இப்போது ஒன்றும் அதற்காகச் சிரமப்பட வேண்டியதில்லை. பணம் எங்கே போய்விடப்போகிறது? சாவகாசமாக பாண்டு எழுதிக்கொண்டால் போகிறது.

சந்திர:—சரி; அடுத்த முறை நாம் சந்திப்பதற்குள் பாண்டை எழுதிவைத்திருந்து கொடுத்துவிடுகிறேன். நீங்கள் இன்று இரவு முழுதும் எங்களுடனேயே காலங்கழிக்கப்போகிறீர்களா? இப்போது மணி பத்து ஆகிறது. நாம் எங்கேனும் சென்று சூதாட்டம் முதலியவைகளில் காலங் கழிக்கலாமா?

செல்வ:—இல்லை, இல்லை. அதெல்லாம் வேண்டாம். நான் இரவு முழுதும் இங்கிருப்பதாக உத்தேசமில்லை. எனக்கு ஒரு வண்டியைக் கொண்டுவாருங்கள். நான் விடைபெற்றுக்கொள்கிறேன். பிறகு மறுமுறை சந்திக்கும்போது விவரமாகப் பேசிக்கொள்வோம்.

சந்திர:—உங்களுக்கு இங்கிருக்க இஷ்டமில்லையாயின் நாங்கள் வற்புறுத்தப்போவதில்லை. இதோ வண்டிக்கு ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் போய்வாருங்கள். என் சித்தப்பருக்கு நீங்கள் ஏதேனும் கடிதம் எழுதுவதாயிருந்தால் இன்று நாம் பேசியதையும் செய்ததையும் பற்றி ஒன்றும் அவருக்கு அறிவிக்கவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செல்வ:—என்? அதைத் தெரிவித்தால் ஏதேனும் கஷ்டம் ஏற்படுமா? இதிலென்ன தவறு இருக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை.

சந்திர:—அப்படி யொன்றும் கஷ்டமில்லை. ஆயினும் இதை யெல்லாம் அவருக்கு என் தெரிவிக்கவேண்டுமென்று

தான் சொன்னேன். மேலும் அவர் ஒருமாதிரி மனிதர். எதற்கும் விகற்பமான பொருளைக் கொள்ளும் சுபாவமுடையவரல்லவா?

செல்வ:—ஆம்; அவர் விகற்பமாக நினைத்தாலும் நினைக்கலாம். ஆதலால் நான் அவருக்குக் கடிதம் எழுதும்போது இதைப் பற்றி ஒன்றுமே எழுதமாட்டேன்.

இதற்குள் தெருவில் வாடகை வண்டி வந்து நின்றுவிடவே செல்வநாதர் அவ்விரு பிரபுக்களின் கையையும் பிடித்துக் குலுக்கிவிட்டு, 'நீங்கள் மரியாதையுடன் உபசரித்ததை எக்காலத்தும் என்னால் மறக்க முடியாது. உங்கள் குணாதிசயத்தைப் போற்றக்கூடிய காலம் விரைவில் வரும் என்றே நம்புகிறேன்,' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். அப்போது சந்திரசேகரம் பிரபு, 'ஐயா, செல்வநாதரே! நாம் இதுவரை யோசித்த விஷயங்களை அனுபவத்தில் நடத்தும் பொருட்டு மீண்டும் நாம் எப்போது சந்திப்பது?' என்று வினவினான். அதற்கு அவர், 'நான் நாளையதினம் இவ்விஷயமாக ஒரு கடிதம் எழுதி அனுப்புகிறேன். அதிலிருந்து நீங்கள் விவரம் தெரிந்துகொள்ளலாம் என்று கூறிக்கொண்டே அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு அவ்வறையை விட்டுச் சென்றான்.

அவர் சென்ற பின்னர் தினகரனும், சந்திரசேகரனும் அவரைப் பற்றி ஒருவித முடிவுக்குவராமல் பலவிதமாக நினைத்தார்கள். அவர் மிக்க எச்சரிக்கையுள்ளவராயும் சிக்கனபுத்தியுடையவராயும் இருந்தாலும் நவீன முறைகளில் தனது வாழ்க்கையைச்செலுத்த மிக ஆவலுள்ளவராக இருக்கிறார் என்பதையும் உணர்ந்து கொண்டார்கள். மறுநாள் காலை சந்திரசேகரம் பிரபு படுக்கையைவிட்டு எழுந்திருப்பதற்கு முன் அவன் மேஜைமீது ஒரு கடிதம் வைக்கப்பட்

டிருந்தது. அவன் எழுந்ததும் அக்கடிதத்தைப் படித்துப் பார்த்தான். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

மூலேக்கொத்தளம், இரத்தினபுரி,

அன்புள்ள சந்திரசேகரம் பிரபுவே !

நீங்கள் நேற்று மாலே கூறிய யோசனைகளைப் பற்றித் தீர்க்கமாக ஆலோசனை செய்தேன். நீங்கள் கூறியதுபோல அவ்வளவு ஆடம்பரமான வாழ்க்கைக்கு நான் ஏற்றவனல்ல என்றே நினைக்கிறேன். உங்களைப் போன்ற பிரபுக்களுடன் கூடி வாழக்கூடிய அருகதை எனக்கில்லை யென்று நிச்சயமாக அறிந்துகொண்டிருக்கிறேன். எனது வக்கீல் எனக்காக ஏற்பாடு செய்யும் ஜமீனே எனக்குப் போதுமானது. ஆதலின் இப்போது நான் மூலேக்கொத்தளத்தைவிட்டு வர வேண்டிய அவசியமில்லை. எனக்கு வேண்டிய குதிரைகளையும் வேலைக்காரர்களையும் நான் இங்கேயே சமாளித்துக் கொள்வேன். எதேனும் சினிமாவில் நான் நிரந்தர ஆசனத்தை வாங்கவேண்டுமென்று சொன்னீர்கள். இவ்வளவு வயதான எனக்கு அப்படி யொன்றும் அவசியமில்லை. இவ்வாறே எனக்கு இந்த வயதில் மனைவியோ துணைவியோ வேண்டியதில்லை. அவர்களை யெல்லாம் காப்பாற்றிக்கொண்டிருக்கவும் என்னுல் முடியாது. மேலும் நீங்கள் தெரிவித்த மாதர்களை நீங்களே அனுபவிப்பதினின்றும் தடுத்து அவர்களை நான் பெற எனக்குப் பிரியமில்லை. எனக்குப் பிரபுப்பட்டமோ அல்லது தேசத்தின் சட்ட சபையில் ஒரு ஸ்தானமோ வேண்டியதில்லை. ஊர் வம்புக்காக நான் ஏன் என் பணத்தைச் செலவிடவேண்டும். ஆகவே எல்லா விதத்திலும் உங்கள் யோசனையின்படி நடக்கமுடியாததற்காக நான் வருந்துகிறேன்.

உங்கள் அன்புள்ள தோழன்,

செல்வநாதர்.

இக்கடிதத்தைப் படித்ததும் சந்திரசேகரனுக்கு முதலில் அதிக கோபமும் ஆத்திரமும் உண்டாயிற்று. ஆனால் இரண்டாம்முறை அதை அவன் படித்தபோது அதிலுள்ள விஷயத்தைக்கண்டு சிரித்தான். இதற்குள் அவனுடைய அந்தரங்கதோழன் தினகரன் வந்து விட்டதால் அவன் சிரிப்பை அடக்கிக் கொண்டான். தினகரனிடம், 'இதோ இக்கடிதத்தைப்பார். அக்கிழவன் நம் சங்கதியைத் தெரிந்து கொண்டு விட்டான். எவ்வளவு உஷாராக இக்கடிதத்தை எழுதியிருக்கிறான். பார்? என்று கூறி அதைக் கொடுத்தான். அவனும் அதை முழுதும் படித்துப் பார்த்து விட்டு, 'இப்படிக்கடிதம் எழுதியிருக்கிறவன் உனக்கு ஏன் அவ்வளவு பெருந்தொகை கடன் கொடுத்தான் என்பது தெரியவில்லையே' என்று கூறிக்கொண்டே அக்கடிதத்தை சந்திரசேகரனிடமே திருப்பிக் கொடுத்து விட்டான். அப்போது சந்திரசேகரன், அவன் தன்னிடம் பணம் இருக்கிறதென்னும் பெருமையைக் காட்டிக் கொள்வதற்காக இதைக் கொடுத்திருக்கவேண்டும். அவன் கிடக்கிறான். அவனைப்பற்றி நமக்கென்ன கவலை? அவனை நம் நண்பர்களிடம் அறிமுகம் செய்துவைப்பதும் அவ்வளவு நன்றாக இராது. அவன் அங்கேயே கிடக்கட்டும். அவன் கொடுத்த பணத்தைக்கொண்டு இன்பமாகக் காலங் கழிப்போம்!' என்று தன் நண்பன் தினகரனிடம் தெரிவித்தான். அவர்களிவரும் பின்னர் செல்வநாதரைப்பற்றிய நினைப்பே இல்லாமல் தங்கள் வழக்கப்படி காலங் கழிக்கலானார்கள்.

## 9-வது அத்தியாயம்

### நடினமாது ராஜலட்சுமி

அடுத்த சனிக்கிழமை இரவு மீண்டும் கிரௌன் தியேட்டரில் எள்ளு போட்டால் கீழே விழ இடமில்லாதபடி அவ்வளவு திரளான ஜனங்கள் ஆடவரும் மாதருமாகக் கூடி விட்டார்கள். அங்கே அந் நகரிலுள்ள பெரிய பணக்காரர்களும், உயர்தர உத்தியோகஸ்தர்களும், ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்களும், கல்விமான்களும், மிக்க அழகானவர்களும் மற்றும் பல வகையினரும் ஒருங்கு கூடி யிருந்தார்கள். எல்லாருடைய முகத்திலும் ஏதோ ஒருவிதமான பிரகாசமும் சந்தோஷமும் காணப்பட்டது. ஆனால் ஒவ்வொருவருடைய ஹிருதயத்தையும் தட்டிப்பார்த்தால் பொறாமையும், கவலையும், மோகமும் குடிகொண்டவர்கள் பலர் அங்கு இல்லாமற் போகவில்லை என்பது தெரியும். எத்தனையோ இளம் பெண்கள் வந்திருந்தார்கள். அவர்களைக் காதலிக்கும் ஆடவர்களும் வந்திருந்தனர். ஆடவர்களிலும் பெண்களிலும் பொறாமை பொச்சரிப்பு உடைவர்களும் இருந்தார்கள். இவ்வாறு ஆட்டங்களுக்குச் சென்றும் மற்றும் பல விதமான துஷ்கிருத்தியங்களில் ஈடுபட்டும் பணத்தையும் பலத்தையும் இழந்து மனச் சோர்வு அடைந்தவர்கள் பலர், மற்றும் அதைக்காண வேண்டுமென்னும் ஆசையால், தங்கள் துக்கத்தை மறைத்துக்கொண்டு மேலுக்கு ஆடம்பரமாக உட்கார்ந்திருந்தார்கள்.

அத்தியேட்டரில் முன் பக்கத்தில் வழக்கம்போல் ஷண்பகவல்லியும் அவளது தோழிகளும், அவர்களுக்குத் துணை

யாக சந்திரசேகரன், தினகரன் ஆகியோரும் உட்கார்ந்திருந் தார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் மற்றோர் ஆசனத்தில் அந்நகரில் பல பணக்காரப் பெண்களுக்கும் சங்கீதம், சித்தி ரம் ஆகியவற்றைக் கற்பிக்கும் மோகனதாஸ் உட்கார்ந்திருந் தான். ராஜகுடும்பத்தினருக்கென ஒதுக்கப்பட்ட ஸ்தானங் களில் இரத்தினபுரியை ஆண்ட ராணியும், அவருடைய பெண்களும் உட்கார்ந்திருந்தார்கள். அதற்கப்பால் ஒரு பிரத்யேக இடத்தில் அன்னிய தேசமாகிய ஜோதிபுரியின் இளவரசர் வீற்றிருந்தார். அவர் இளவரசர் என்னும் பெய ரைப் பெற்றிருந்தாரே யொழிய உபாயமான ஆஸ்தியுடை யவராகவே இருந்தார். எனினும் அவருடன் சில ஆட்கள் வந்து அவருக்குத் துணையாக அவர் பின்னால் நின்றிருந்தார் கள். அவருடைய ஆட்களெல்லாம் விசித்திரமான ராஜ தர்பார் உடையை அணிந்திருந்தார்கள். அத் தியேட்டருக்கு வந்த ஜனங்களில் அவர்களைப் பார்க்காதவர்களே இல்லை யென்று கூறலாம்.

அக்கொட்டகையில் நடைபெற்ற பல விஷயங்களைப் பற்றி விவரிப்பதற்காக நாம் இப்போது இதை எழுதவில்லை. அன்று மாலை அங்கு நடப்பதற்காகத் தோன்றிய ராஜலட்சுமி யைப்பற்றி விவரிக்கவே இதை எழுதலானோம். அவளுக்கு வயது சுமார் பதினெட்டு இருக்கும், அவளுடைய அழகை வருணித்து முடியாது. இவ்வுலகில் இதுவரை எந்தக் கவி யாலும், அல்லது சித்திரக்காரராலும் கனவிலும் நினைத்திருக்க முடியாத அவ்வளவு அழகும் ரூபலாவண்யமும் உடையவ ளாய் இருந்தாள். அவள் மேடைமீது தோன்றியபோது ஜனங்கள் கைக்கொட்டி ஆரவாரம் செய்ததைப் பார்த்தால் அக்கட்டடமே இடிந்து விழுந்து விடும்போ லிருந்தது. அங் குக் கூடியிருந்த ஜனங்களெல்லாம் மெய்மறந்து தங்க விக்

கிரகம் போன்ற அப்பெண்மணியையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவள் தேவலோக மாதே என்று எல்லாரும் நினைத்து அவளைக்காணும் பாக்கியத்தைப் பெற்றதற்காக ஆனந்தக் கூத்தாடினார்கள். அவளுடைய முகத்தோற்றம் பார்ப்போரை வசீகரிக்கும் தன்மையுடையதாய் இருந்தது. அவளுடைய பார்வை என்னும் வலையில் சிக்கிக்கொள்ளாத ஆடவர்களே இல்லை. அங்குக் கூடியிருந்த பெண்களும் அவளைக்கண்டு மோகித்து அவளுடன் பேச வேண்டும், சினேகம் செய்து கொள்ளவேண்டும் என்று ஆசைப்பட்டார்களென்றால் ஆடவர்கள் மனம் எத்தகைய பாடுபட்டிருக்க வேண்டும் என்பதைக் கூறவும் வேண்டுமா? அவளுடைய ஸ்தனபாரங்களிரண்டும் அழகிய வடிவத்துடன் அமைந்து பார்ப்போர் கண்ணைக் கவரத்தக்கதாய் இருந்தன. அவள் அணிந்திருந்த உடைகளும் அவளுடைய இயற்கையழகை இரட்டிப்பாக்கியது டன் அவள் அவ்வாடைகளை அணிந்த முறையே அவளைப் பார்த்த ஆடவர்களின் மனத்தில் ஒருவித காமவிகாரத்தை எழுப்பக் கூடியதாய் இருந்தது. அவள் அணிந்திருந்த இரவிக்கையின் நீளம் தோளுடன் நின்று விட்டதாலும், அடியில் அணிந்திருந்த உடையும் தொடை வரை நின்று விட்டதாலும் அவளுடைய அங்கங்கள் சிறிது மறைவாகத் தெரிந்ததால் ஆடவர்களனைவரும் அவற்றையே முழுகவனத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இதுவரை நாம் விவரித்ததில் இருந்து ராஜலட்சுமியின் அழகை ஒருவாறு நேயர்கள் அறிந்து கொள்ளும்படி செய்திருக்கிறோமே யொழிய அவள் அழகு முழுதையும் வர்ணிக்க ஆதிசேஷனாலும் முடியாதென்றே கூறி விடலாம். இப்போது அவள் நடனம் செய்யும்போது எத்தகைய ஆற்

றல்களை வெளிப்படுத்தினள் என்பதை விவரமாகத் தெரிவிக்கவும் நம்மிடம் சொற்பிரயோகங்கள் இல்லை என்னும் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டியதாகவே இருக்கிறது. அவள் மிக்க சாமர்த்தியத்துடன் பரத நாட்டியத்தில் கை தேர்ந்தவர்களெல்லாம் பார்த்து பிரமிக்கும்படி சிறிதும் தவறு இல்லாத வகையில் நடித்ததானது அங்கிருந்த எல்லோரையும் தங்களுக்கும் தெரியாமலே கைகொட்டி ஆரவாரம் செய்யும்படி செய்தது. தேவலோகம் என்று சொல்லப்படுவதில் உள்ள மாதர்களெல்லாம் ஒருங்குகூடித் தங்கள் அழகையும் ஆற்றலையும் ஒன்றாகத் திரட்டி ராஜலட்சுமிக்கென்று அனுப்பியதுபோல் தோன்றியது.

அங்குக் கூடியிருந்த அனைவரும் பொதுவாக அவளது ரூபலாவண்யத்தையும், நடிக்கும் திறமையையும் கண்டு ஆச்சர்யமடைந்து அவளைப் பாராட்டினார்களென்றாலும் பற்பலருடைய மனதிலும் அவரவர்களுடைய மனோபாவத்துக்கேற்பப் பலவித யோசனைகள் தோன்றின. உதாரணமாக அங்கே இருந்த சந்திரசேகரம் பிரபு அவளுடைய திறமையைப்பற்றிக் கவலை கொள்ளாமல் அவ்வளவு அழகுடைய ஒருத்தியை எப்படியாவது சினேகம் செய்துகொள்ள வேண்டுமென்று கருதியதுடன், தினகரம் பிரபுவுக்காக அவளை ஏற்பாடு செய்வதென்று தான் ஒப்புக்கொண்டதற்காக வருத்தமடைந்தான். தினகரனுக்கு அவளிடம் தனியாக் காதல் ஏற்பட்டிருப்பதைக் கண்டு பொறாமை கொண்டான். அருகிலேயே தினகரன் இருந்தும் அவனுக்கும் தெரியாமல் சந்திரசேகரன் இவ்வாறெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறான் பாருங்கள்! இதுவும் உண்மைச் சினேகமா? அவனுவது வாலிபன் அப்படி நினைக்கிறான் என்றால் மற்றோரிடத்தில் உட்கார்ந்திருந்த வயது சென்ற ஜமீன்தார் ஒருவர், வீடு போ போ என்றும்,

காடு வா வா என்றும் சொல்லக்கூடிய நிலைமையில் இருந்தும் சோபாவில் சாய்ந்த வண்ணம் தான் ராஜலட்சுமியின் அழகையும் நடனத்தையும் பாராட்டுவதற்கு அறிகுறியாகவும், அவள் சினேகத்தைப் பெறுவதற்கு முகாந்தாமாகவும் மறுநாள் காலை அவளுக்கு ஐம்பதினுயிரம் பவுன் சன்மானம் செய்வதா? அல்லது லட்சம் பவுனே அனுப்பி விடுவதா என்று யோசித்துக் கொண்டிருந்தார். அவ்வாறே அதற்கு அருகில் இருந்த மற்றொரு நடுத்தா வயதுள்ள மிட்டாதாரும் ராஜலட்சுமியின் தயவை எப்படிப் பெறுவது என்பதற்கு வேண்டிய பலதிற யோசனைகளை யெல்லாம் செய்து கொண்டிருந்தார். மற்றோரிடத்தில் இரத்தினபுரியைச் சேர்ந்த பிரபு ஒருவர் வீற்றிருந்தார். அவரோ மனைவியை இழந்தவாாகவும், பெரிய பணக்காராாகவும் இருந்த படியால் அவளை எப்படியாவது மணம் செய்துகொண்டு விடுவதென்று தீர்மானித்து விட்டார். இவர்கள் மட்டுமா? அங்கு வீற்றிருந்த ஜோதிபுரி இளவரசரும் மற்றவர்களைப் போலவே அவள் மீது மோகம் கொண்டு அவளை எப்படியாவது தன்னுடன் அழைத்துக் கொண்டு போகவேண்டுமென்று நினைத்ததுடன் அதைத் தன் காரியஸ்தரிடமும் அப்போதே தெரிவித்து விட்டார்.

ஆனல் இப்படி யெல்லாம் தவருன முறையில் இல்லாமல் நல்லெண்ணத்துடனும் திருப்தியாகவும் அவளைக் கவனித்தவர்களும் அங்கு இல்லாமலில்லை. உதாரணமாக, மோகனதாஸ் அவளைக் கெட்ட எண்ணத்துடனே, அவளிடம் மோகங்கொண்டோ, அவளைக் கட்டியணைத்துக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடனே இல்லாமல் இச்சிறு வயதில் அழகிற் சிறந்த ஒரு பெண் குற்றமற்ற முறையில் சாஸ்திர ரீதிப்படி நடித்து அவ்வளவு பெருந் தொகையினருடைய பாராட்டுதலுக்கு ஆளானளே என்று சந்தோஷப்

பட்டு அவளிடம் அன்புகொண்டு அவளை நோக்கினன். அது போலவே அத்தியேட்டரில் ஆடம்பர மற்ற முறையில் ஒரு மூலையில் அடக்கத்துடன் உட்கார்ந்திருந்த செல்வநாதரும் அவளுடைய ரூபலாவண்யத்தையோ, வசீகரத் தன்மை யையோ கண்டு மோகித்து விடாமல், அவள் எவ்வளவு அழ குடன் இருக்கிறாளோ அவ்வளவு பரிசுத்தமாகவும், ஒழுக் கத்திற் சிறந்தவளாகவும் இருப்பதாகக் கேள்விப்பட்டு, உத் தமியான அவள் அவ்வளவு பெரிய கூட்டத்தில் அனைவரும் கைகொட்டி ஆரவாரிக்கும்படி நடனத்தில் வெற்றி யடைந்து விட்டாளே யென்று கருதி சந்தோஷப்பட்டார்.

இறுதியாக ராஜலட்சுமி தன் நடனத்தை முடித்துக் கொண்டு அனைவருக்கும் கைகூப்பி வணக்கம் செலுத்தி னாள். அப்போது எழுந்த ஆரவாரம் அடங்குவதற்குச் சில நிமிஷ நேரம் பிடித்தது. பலர் ரோஜாமலர்களை அவள்மீது வாரி இறைத்தார்கள். வேறு பலர் தங்கள் கைக்குட்டை களை அசைத்து அசைத்துத் தங்கள் சந்தோஷத்தை வெளி யிட்டார்கள். அன்று அவளைக் கண்டு ஆச்சரியமடைந்து பாராட்டாதவர் ஒருவருமே இல்லை என்று கூறுவது மிகை யாகாது. நாடகம் முடிந்ததும் பெரும்பான்மையான ஜனங் கள் வெளியே செல்லத் தொடங்கினர். ஆனால் அவளிடம் மோகங்கொண்டு பற்பலவித எண்ணங்களை நினைத்தவர்கள் வெளியே செல்லாமல்மேடைமீது ஏறி நடிகர்கள் இருக்கும் இடத்துக்குச் சென்று ராஜலட்சுமியை நெருங்கிப் பார்த்துப் பேச விரும்பினர்கள். ஆனால் அவ்வாறு செய்ய எவருக்குமே அனுமதி கிடைக்கவில்லை. யாரும் மேடைமீது வரக்கூடா தென்றும், முன் பின் தெரியாத ஆடவர்கள் அங்கு வருவ தையோ, தன்னுடன் பேசுவதையோ ராஜலட்சுமி விரும்ப வில்லை யென்றும் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது. ஆகவே எல்லோரும் ஏமாற்றமடைந்து திரும்பிவிட்டனர்.

மேடைக்குப் பின்புறத்தில் வெளியே சந்திரசேகரம் பிரபுவின் வேலைக்காரனை ஆறுமுகம் விலை யுயர்ந்த ஆடைகளை அணிந்துகொண்டு, அங்கு ஒரு குறிப்பிட்ட வேலையும் இல்லாமல் வீண் காலப் போக்கிற்காக நின்று கொண்டிருப்பவன் போலவும் மேலும் கீழுமாக நடந்துகொண்டிருந்தான். அப்போது உபாயவேடம் தரிப்பவர்களான ஆடவரும் மாதரும் வெளியேவந்ததை அவன் கண்டான். பிறகு ஒரு வேலைக்காரன் ஓடிப்போய் ஒரு வண்டியைக்கொண்டு வந்தான். அதில் மற்றும் சில உயர்தர நடிகர்கள் ஏறியதும் வண்டியும் புறப்பட்டுச் சென்றது. பிறகு மற்றொரு பெட்டி வண்டி அலங்கரிக்கப்பட்டு அங்கே வந்து நின்றது. அதில் யார் ஏறப் போகிறார்கள் என்று ஆறுமுகம் மிக ஆவலுடன் கூர்ந்து நோக்கினன். அப்போது அந்தக் கம்பெனியில் சங்கீதத்தில் தேர்ந்தவளான கிரிஜா என்பவள் அதில் ஏறினாள். அந்த வண்டியும் புறப்பட்டுச் சென்றது. பிறகு அன்று நாடகத்தில் கலந்து கொண்ட எல்லாரும் ஒவ்வொருவராக அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள். கொட்டகையிலிருந்து வெளிவந்த பெண்களை யெல்லாம் ஆறுமுகம் கவனித்துப் பார்த்தான். அழகிற் சிறந்த ராஜலட்சுமியைத் தவிர மற்றவர்கள் பலர் வந்தார்களே யொழிய அவன் யாருக்காகக் காத்திருக்கிறானோ அப்படிப்பட்டவளான ராஜலட்சுமி வரக்காணோம். என்ன செய்வான் பாவம். அவள் வேறு வழியாகப் போய்விட்டாளோ என்று கலங்கினன். ஆயினும் கொட்டகையின் கதவுகளெல்லாம் மூடப்படும் வரையில் அங்கேயே காத்திருந்து கவனிப்பதென்று நிச்சயித்தான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு குதிரைவண்டி வந்து வாயிற்படியில் நின்றது. அவ்வண்டியின் மீது அது பா

மேஸ்வரம் பிரபுவுக்குச் சொந்தமானதென்று எழுதப்பட்டிருந்தது. அதை ஓட்டிக்கொண்டு வந்த வண்டிக்காரனும் அழகாக அலங்கரித்துக்கொண்டிருந்தான். வண்டிக்குத் திறை போடப்பட்டிருந்தது. வண்டி வந்து நின்ற சிறிது நேரத்துக்கெல்லாம் முகமூடி யணிந்த ஒரு யௌவனமாது அத்தியேட்டரினின்றும் வெளி வந்தாள். அவளை ஒரு ஆடவன் பிடித்துக் கொண்டுவந்து அவ்வண்டியில் ஏற்றினான். அவளுடைய உயரத்தையும், காலுக்குக் கீழ் தெரிந்த பாதத்தையும் கண்டு அவள்தான் ராஜலட்சுமியாக இருக்கவேண்டுமென்று ஆறுமுகம் தெரிந்து கொண்டான். அவளுடன் வந்த ஆடவன் தியேட்டருக்குச் சொந்தமானவர்களில் ஒருவன் என்று ஆறுமுகம் தெரிந்து கொண்டான். அவள் ஏறியதும் அவ்வண்டியும் புறப்பட்டது.

உடனே ஆறுமுகம் அருகிலிருந்த ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு முன் சென்ற அந்த வண்டியின் பின்னாலேயே செலுத்தும்படி கட்டளை யிட்டான். அவ்வாறே வண்டியும் செலுத்தப்பட்டது. ராஜலட்சுமி ஏறிச்சென்ற வண்டியின் குதிரை கோர்த்தியானதாயும், பலமுள்ளதாயும் இருந்ததால் அதிக வேகமாகப் பல முக்கிய தெருக்களையும், பார்க்குகளையும் சந்துகளையும் கடந்து சென்று இரத்தினபுரியின் வடகோடியிலுள்ள ஒரு சிறு மலையின் மீது ஏறி அதையும் கடந்து அப்பால் வெகுதூரம் வரை ஒரு குறுகிய ரஸ்தாவின் வழியே சென்றது. ஆறுமுகம் ஏறிய வண்டியும் அதன் பின்னேயே தொடர்ந்து சென்றது. சிற்சில சமயங்களில் அவ்வண்டி மெதுவாகச் சென்றபோது ஆறுமுகம் வண்டிக்காரனை உற்சாகப்படுத்தி விரைவாகச் செலுத்தும்படி கூறினான். பிறகு பரமேஸ்வரம் பிரபுவின் வண்டியும் ஒரு பெரிய வயலின் மத்தியில் அழகிய முறையில் அமைக்கப்பட்டிருந்த

சிறு மாளிகையின் முன் நின்றது. ஆறுமுகம் மட்டும் மற்றவர்களுக்குச் சந்தேகம் ஏற்படலாகாதென்னும் காரணத்துக்காகத் தன் வண்டியை இன்னும் சிறிது தூரம் செலுத்தும்படி சொன்னான். ஆனால் அவன் ராஜலட்சுமியின் வண்டியைக் கவனித்துக்கொண்டிருந்தான். அவள் வண்டியிலிருந்து இறங்கி அச்சிறு மாளிகையில் நுழைந்தாள். அதைக் கண்ட அவன் பிறகு அதே வண்டியில் தன் எஜமானனை சந்திரசேகரம் பிரபுவின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

ஆறுமுகம் ராஜலட்சுமியின் இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டு வருவதற்காகச் சென்றிருக்கின்றான் என்பதை அறிந்த சந்திரசேகரம் பிரபுவும், தினகரம் பிரபுவும் தியேட்டரிலிருந்து வீட்டுக்குச் சென்றதும் தூங்காமல் அவன் வருகையை எதிர்பார்த்து விழித்துக்கொண்டிருந்தார்கள். ஆறுமுகம் அங்கே சென்றதும் அவர்களிருவருக்கும் வணக்கம் செலுத்திவிட்டு நின்றான். அவன் முகத்தைக் கண்டதும் அவன் வெற்றியுடன் திரும்பியிருக்கிறான் என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டார்கள். அவனும் சிறிதும் தாமதியாமல் தான் எந்தெந்த வழியாக ராஜலட்சுமியின் வண்டியைப் பின் தொடர்ந்து சென்றானோ அதையெல்லாம் விவரமாகத் தெரிவித்து இறுதியில் அவள் தங்கியிருக்குமிடத்தையும் தெரியப்படுத்தினான். அப்பிரபுக்களிருவரும் ஆறுமுகத்தின் பொறுமையையும் விடாமுயற்சியையும் பாராட்டினார்கள். ஆறுமுகம் அங்கிருந்து சென்ற பின்னர் ராஜலட்சுமியைப் பற்றி பேச வேண்டுமென்னும் ஆவலையுடைய தினகரன், சந்திரசேகரனிடம், 'சரி அப்படியானால் இப்போது ஆறுமுகம் தெரிவித்த விஷயத்தைக் கொண்டு முதலில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டியது யார்? ராஜலட்சுமியிடம் உனக்கும் தனியாக் காதல் ஏற்பட்டுவிட்டதாக நீ கூறுகின்றாய்.

என்னைப் பற்றிக் கேட்கவேண்டியதேயில்லை. அவள் பைத்தியமே எனக்கு அதிகமாகிவிட்டது என்றும் கூறலாம். ஆனால் எனக்கு ஷண்பகவல்லியிடம் இருக்கிற அன்புக்கும், ராஜலட்சுமியிடம் ஏற்பட்டிருக்கும் மோகத்துக்கும் வித்தியாசமிருக்கிறது. ஷண்பகவல்லியை நான் கலியாணம் செய்துகொள்ளப்போவதால் அவளிடம் இயற்கையாகவே எனக்கு அன்பு ஏற்பட்டுவிட்டது. ஆனால் ராஜலட்சுமியிடமோ அவள் அழகையும், ஆற்றலையும் கண்டு மோகங் கொண்டிருக்கிறேன். அவளுடைய இன்பத்தை ஒரு முறையாவது நுகரவேண்டு மென்னும் ஆசை அதிகரித்திருக்கிறது?' என்று தெரிவித்தான்.

அப்போது சந்திரசேகரன், 'தினகரம் பிரபுவே! நீ அதைப் பற்றி இப்போது நீண்ட பிரசங்கம் செய்யவேண்டியதில்லை. இவ்விஷயத்தில் நாம் இருவரும் போட்டி போடுவது நன்றாய் இராது. ஆயினும் இருவருக்குமே அவளிடம் ஆசை இருக்கிறதென்பது நிச்சயம். ஒருவருக்காக ஒருவர் விட்டுக் கொடுப்பதென்பதும் அசாத்தியம். ஆதலின் ஒரு பவுனை எடுத்துத் தட்டிப்போடுவோம். யார் ஜெயிக்கிறாரோ அவர் அவளை யடையட்டும்? என்று யோசனை கூறினான். உடனே தினகரனும் மிக்க சந்தோஷத்துடன், 'அப்படியானால் இதோ இந்தப் பவுனைத் தட்டிப்போடுகிறேன் தலையா, எழுத்தா சொல்' என்று கேட்டான். அதற்கு சந்திரசேகரன் 'தலை' என்று சொன்னான். ஆனால் பவுனைத் தட்டிப் போட்டபோது எழுத்து விழுந்ததால் தினகரனே அவளை அனுபவிப்பது என்னும் முடிவுக்கு வந்துவிட்டார்கள். இருவரும் ஆனந்தமாகச் சிறிது நேரம் மதுபானம் அருந்திக் கொண்டிருந்துவிட்டுப் பிறகு அவ்விடத்தைவிட்டுச் சென்றனர்.

## 10-வது அத்தியாயம்

### தோட்ட மத்தியில் ஒரு விடுதி.

மறு நாள் காலை தினகரம் பிரபு தன் நண்பனுகிய சந்திரசேகரம் பிரபுவின் வீட்டுக்குச் செல்லவில்லை. ஆனுல் ஒரு சிறு கடிதம் எழுதியனுப்பி அதில் தான் ராஜலட்சுமியைப் பெறுவதில் முழுகவனத்தையும் செலுத்தப் போவதால் வாமுடியவில்லையென்று தெரிவித்துவிட்டான். தினகான் காலையில் எழுந்ததும் காலை ஆகாரம் அருந்திவிட்டுத் தன் அறையிலேயே உட்கார்ந்துகொண்டு தன் நோக்கத்தை எப்படி நிறைவேற்றிக்கொள்வது என்பது பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தான். தன் அறையைவிட்டு மற்றெங்கும் போகாததன் காரணம் தன் தாயைப் பார்க்கக்கூடாதென்பதேயாகும். ராஜலட்சுமிக்கு ஒரு கடிதம் எழுதி அவளைக் கண்டு பேசத் தனக்கு அனுமதியளிக்கும்படி கேட்கலாமென்று நினைத்தான். ஆனுல் அவன் அவளைப் பற்றிப் பல இடங்களிலும் விசாரித்து அறிந்ததிலிருந்து இத்தகைய சாதாரண முறைகளாலெல்லாம் அவளை அடைந்துவிட முடியாது என்பதையும் அறிந்துகொண்டிருந்தான். ஆகவே வேறு ஏதேனும் சூழ்ச்சி செய்து அவளையடையவேண்டும் என்று நிச்சயித்துக்கொண்டான். எவ்வளவோ பேர் தங்களாலியன்ற முயற்சிகளை யெல்லாம் செய்தும் தோல்வியடைந்துவிட்டிருக்கும்போதும், ராஜலட்சுமியின் கற்பைப் பற்றிப் பலரும் சிலாகித்துப் பேசும்போதும் தினகான் மட்டும் எப்படி இதில் வெற்றிபெற முடியும்? ஆனுல் தினகரன் இயற்கையாகவே பணத் திமிர்பிடித்தவனுதலாலும், வீண்

பேராசையுடையவனுதலாலும் தான் மட்டுமே இதில் வெற்றி யடையலாமென்று நம்பிக்கை கொண்டான். மேலும் அவன் தன்னைப் பற்றித் தற்பெருமைகொண்டிருந்தான். அவனுடைய அழகு எப்படிப்பட்டதென்னும் உண்மையை முகம்பார்க்கும் கண்ணுடி வியக்தமாகத் தெரிவித்த தென்ரு லும் அவன் அதை நம்பவில்லை. தான் மிக்க ரூபலாவண்ய முடையவனென்றும், தான் புன்சிரிப்பு சிரித்துவிட்டால் அதைக் கண்டு மயங்காத மாதர்களே இவ்வுலகில் இல்லை யென்றும் நிச்சயமாக நம்பியிருந்தான்.

மேலும் அவன் சாதாரணமாகப் பெண்களின் கற்பில் அவ்வளவாக நம்பிக்கை இல்லாதவனுக இருந்தான். எந்த மாலதயும் எப்படியாவது வசப்படுத்திவிடலாம் என்பது அவனுடைய திடமான நம்பிக்கை. அதிலும் நாடகமேடை மீது ஏறும் எந்தப் பெண்மணியும் கற்புடையவளாக இருக்க முடியாதென்று நினைத்திருந்தான். அன்றியும் குழந்தைப் பருவம் முதலே அவனை எல்லாரும், 'எனது பிரபுவே' என்று கூப்பிட்டுப் பழக்கமாதலால் தன்னுடைய அந்தஸ்தே எல் லாக் காரியங்களிலும் வெற்றியளிக்கவல்லது என்றும் கருதி யிருந்தான்.

எல்லாம் சரிதான். ஆனுல் அவளைக்காணும் வகை என்ன ? அவளுக்கு நேராகக் கடிதம் எழுதுவதில்லை என்று முடிவு செய்து விட்டான். அவ்வாறே தான் நேரில் அவள் தங்கியுள்ள சிறு மாளிகைக்குச் சென்று தான் வந்திருப்ப தாக ஆள் மூலம் சொல்லி யனுப்புவதிலும் பிரயோசன மில்லை என்று நினைத்தான். எனினும் தினகரன்தானே நேரில் அவளுடைய இருப்பிடத்துக்குச் சென்று அங்கு வேலைசெய் யும் பெண்களின் சினேகத்தைச் சம்பாதித்துக்கொண்டு அவர்கள் மூலம் அவளுடைய விவரங்களை யெல்லாம்

தெரிந்து கொள்ளலாமென்றும், அவள் பகலில் தனியாக வெளியே உலாவச் செல்வதுண்டா என்றும் அவளை யடைவதற்கு வழி என்ன என்றும் அவர்களையே விசாரித்து அறிவதென்றும் தீர்மானித்துக் கொண்டான். ஆனால் அவன் தன்னை நன்ருக அலங்கரித்துக்கொண்டு விலை யுயர்ந்த ஆடை ஆபாணங்களுடன் அவளுடைய மாளிகைக் கருகில் திரிந்து கொண்டிருந்தால் அவள் ஆரம்பத்திலேயே சந்தேகப்பட்டு எச்சரிக்கையாய் இருந்து விட்டால் தன் காரியம் தோற்று விடும் என்று நினைத்துக்கொண்டு மிக்க எளிய உடையை அணிந்து ஒரு ஏழையைப்போல் அங்குச் சென்று அவளுடைய விவரங்களை அறிவதென்று முடிவு செய்தான். அப்போது அவன் தன் குறுகிய புத்திக்கேற்பப் பின் வருமாறு தனக்குள் நினைத்துக்கொண்டான்: “நான் எளிய உடையை அணிந்துகொண்டு ஏழையைப்போல் அவள் வெளியில் செல்லும்போது அவளது எதிரில் தென்பட்டால், என்னுடைய உடைக்குப் புறம்பாக என்னிடம் காணப்படும் உண்மையான பிரபுத்தன்மையை அவள் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. உடனே அவள் என் விஷயத்தில் கவனம் செலுத்துவாள். அப்போது நான் அவளுக்கு மரியாதையாக வணக்கம் செலுத்தி அவள் விஷயத்தில் எனக்கு எத்தகைய கெட்ட எண்ணமும் இல்லாதவனைப்போல் நடந்து கொண்டால், அவளுக்குச் சந்தோஷமாய் விடும். அதிலிருந்து நான் அவள் கவனத்தை என்பால் இழுப்பதில் வெற்றி யடைந்து விடுவேன். இவ்வாறு இரண்டு மூன்று தினங்கள் நடந்தால் பிறகு அவள் ஒருகால் என்னுடன் பேசினாலும் பேசலாம். அதனால் நமக்குள் ஒருவரை யொருவர் அறிமுகம் செய்து கொள்ள ஹேது வுண்டாகும். மீண்டும் இரண்டு மூன்று நாட்கள் இவ்வாறே நடந்து கொண்டால் எங்களுக்குள் சிநேகம் அதிகரித்து விடுமாதலின் அப்போது நான் என்

உண்மைப் பெயரையும், எனக்குள்ள ஆஸ்தியையும், நான் என் எளிய உடையை அணிந்து வந்தேன் என்பதையும், எனக்கு அவளிடம் எவ்வளவு அன்பு இருக்கிறது என்பதையும் விவரமாகத் தெரிவித்தால் அவள் என்பால் அன்பு கொள்ளாமலிருக்க முடியாது. பிறகு அவள் எவ்வளவுதான் கற்புடையவளாக இருந்தாலும் எனக்கு அவளிடமுள்ள விசுவாசத்துக்காகவேனும் அவள் அக்கற்பினின்றும் தவறியே ஆகவேண்டிய நிலைமை ஏற்படுமென்பது நிச்சயம்''

தினகரன் மட்டும் அப்படி நினைப்பதாக வாசகர்கள் நினைத்து விடலாகாது. பரநாரி சகோதரர்களாகவுள்ள உத்தமர்கள் தவிர, பல பெண்களிடமும் இன்பம் அனுபவிக்க வேண்டுமென்று நினைக்கும் அயோக்கியர்கள் ஒவ்வொருவரும் தாங்களே உலகில் மிக அழகானவர்களென்றும், தங்கள் அழகையும் ஆற்றலையுங்கண்டு எப்படிப்பட்ட மாதர்களும் மோகிக்காதிருக்க முடியாதென்றும், தாங்கள் மனம் வைத்து விட்டால் எப்படிப்பட்ட மாதரும் தங்கள் கற்பை இழக்கும்படி செய்து விடலாமென்றும் மனப்பால் குடிப்பது உலகில் சகஜமாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஆடவர்களுடைய மாயவலையில், ஒழுக்கங்கெட்ட அல்லது அறியாமை நிரம்பிய ஒரு சில மாதர்கள் சிக்கிக்கொண்டு விடலாம். அதற்காகவே உலகில் எல்லா மாதர்களும் தங்களிஷ்டப்படி நடந்துகொண்டு விடுவார்கள் என்று நினைப்பது அசட்டுத்தனமாகும்.

தினகரன் தான் நினைத்த யோசனையின்படி நடந்து கொண்டால் நிச்சயமாக வெற்றியடைந்து விடலாமென்று நம்பியதால் அந்த யோசனையின்படி நடந்து கொள்வதில் சிறிதும் காலதாமதம் செய்யவில்லை. அவன் அவ்வாறு யோசனை செய்து முடித்தபோது பகல் இரண்டுமணியாய் விட்டது.

அன்று ஞாயிற்றுக்கிழமையாய் இருந்ததால் தான் நினைத்த படி எளிய உடைகளை எங்கிருந்து சம்பாதிப்பது என்று தெரியாமல் தன்னிடமிருக்கும் உடையிலேயே கூடியவரை எளிமையாக இருப்பதை அணிந்துகொண்டு புறப்பட்டான், அவன் ஆடம்பரமான வண்டியில் செல்லவில்லை. உபாயமாக வாடகை வண்டியை அமர்த்திக்கொண்டு ஆறுமுகம் தெரிவித்த இடமாகிய ராஜலட்சுமியின் இருப்பிடத்துக்குச் சிறிது தூரம் சென்று சேர்ந்ததும் வண்டிக்காரனை அனுப்பி விட்டான். பிறகு அவன் சிறிது தூரம் நடந்து சென்று அம்மாளிகைக்குச் சமீபத்தில் போய், அம்மாளிகையின் அமைப்பையே கண்டு ஆச்சர்யமடைந்தான். அதன் பின்னால் பெரிய தோட்டமும், குதிரை லாயம் முதலிய சிறு கட்டடங்களும் இருந்தன. அவன் அக்கட்டடத்தைச் சுற்றிப்பார்த்துக் கொண்டிருந்தபோது சமீபத்தில் ஒரு சிறு விடுதி இருப்பதைக் கண்டான். ஆகவே அங்கு சென்று ராஜலட்சுமியைப் பற்றி விசாரிக்கலாமென நினைத்தான். அவ்விடுதி மிகப் பழைய கட்டடமாகவும், யாரோ ஏழையின் இருப்பிடம் போலவும் காணப்பட்டதுடன் அதுவும் ஒரு தோட்டத்தின் மத்தியில் இருந்தது. தினகரன் அங்கு சென்று கதவைத்தட்டினான்.

கதவு திறக்கப்படுவதற்கு முன்யாரோ ஒருவர் முன்பக்கத்திலிருந்த ஜன்னல் திரையை நீக்கி எட்டிப்பார்ப்பதைக் கண்டான். பிறகு சிறிது நேரத்துக்கெல்லாம் பார்வைக்கு அவ்வளவு அழகாக இல்லாத ஒரு மாது வந்து கதவைத் திறந்தாள். அவளுக்கு வயது சுமார் 45 இருக்கும். நடுத்தரமான உயரமுடையவள். அவளுடைய கூந்தல் சிறிது சிறிதாக நரைத்துவரத் தொடங்கியது. அவளுடைய தேகம் ஆடவர்களுடைய தேகம்போல் உறுதியானதாயும், கட்டு

டையதாயும் இருந்தது. அவள் மிக்க தைரியமுடையவளா கக் காணப்பட்டாள். அவள் முகத்தை நோக்கும்போதே அவள் மிக்க காமவிகாரமுடையவ ளென்பதும் ஆனல் இப் பால் அவ்வுணர்ச்சி குறைந்துவருவதாகவும் தோன்றியது. அவளுடைய உடை எளிமையானதாகவே இருந்தது. அவள் கதவைத் திறந்ததும் ஒன்றும் பேசாமல் வந்தவன் என்ன சொல்லப்போகிறுன் என்பதைக் கேட்க மிக ஆவலுடையவ ளாய் இருந்தாள். அவ்வளவு அழகிய உடையை யணிந்த வாலிபன் ஒருவன் அங்குவரவேண்டிய அவசியமென்ன வென்று நினைத்து மிக ஆச்சர்ய மடைந்தாள், தினகானுக்கும் என்ன சொல்வதென்று ஒன்றும் விளங்கவில்லை. எனினும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, 'அம்மணி! நான் இங்கே அதிக நேரமாக உலாவிக்கொண்டிருப்பதால் மிக்க அயர்ச்சி யடைந்திருக்கிறேன். நீ அனுமதி கொடுத்தால் உள்ளே புகுந்து சிறிது நேரம் உட்கார்ந்திருப்பேன்' என்று கூறி ஞன். அதற்கு அவள், 'இங்கிருந்து அரை மைல் தூரத்தில் ஒரு பெரிய சத்திரமிருக்கிறது. நீர் அங்குச் சென்ருல் அந்த இடம் இதைவிடச் சௌகரியமானதாக இருக்கும். ஆதலின் அங்குச் செல்லுங்கள்' என்ருள். அதற்கு அவன், 'இல்லை, இல்லை. அந்த அரை மைல் தூரம் நடந்து செல்வதற்கும் இப் போது என்னுல் முடியாது. அவ்வளவு களைப்படைந்திருக் கிறேன். மேலும் இன்று ஞாயிற்றுக்கிழமை யாதலால் மில்களெல்லாம் மூடப்பட்டிருக்கவே எல்லாத் தொழிலாள ரும் அங்கு சென்றுகொண்டிருக்கிருர்கள். அப்படிப்பட்ட ஆபாசமான ஜனங்களிடையே இருக்க என்னுல் முடியாது' என்று தெரிவித்தான். அம்மாது அவனைக் கூர்ந்து நோக்கி யதில் அவன் வேறு ஏதோ காரணத்தைக் கொண்டு இவ் வாறு செய்கிருன் என்பதை உணர்ந்து, 'அப்படியானல்

அசௌகரியமான இந்த இடத்தைத் தான் நீர் விரும்புகிறீர் போலும்! சரி! உங்களுடைய நோக்கம் வேருக இருக்கிறது. வாருங்கள் உள்ளே' என்று சொல்லிக்கொண்டே கதவை நன்ருகத் திறந்துவிட்டாள். அந்த வீட்டில் இரண்டு அறைகளும் அவற்றைப் பிரிக்கும் ஒரு கூடமும் இருந்தது. அதேமாதிரி மாடிமீதும் இரு அறைகள் இருந்தன. தினகரனை அம்மாது அழைத்துச் சென்ற அறையில் முறிந்துபோன சில நாற்காலிகளும், மேஜையும் கிடந்தன. வேறு ஒரு அறையில் மிக்க அழுக்கான படுக்கை யொன்று தரையிலேயே விரிக்கப்பட்டிருந்தது. அவ்வீட்டில் அம்மாது ஒருத்தியே இருப்பதாகத் தெரிந்தது. அப்போது அம்மாது அவனிடம், 'நீராகத் தங்குவதற்கென்று தேர்ந்தெடுத்துக்கொண்ட இடத்தின் நிலைமையைப் பார்த்தீரா? ஆயினும் இருக்கிற இடத்தில் நீங்கள் எவ்வளவு வேண்டுமாயினும் சௌகரியம் செய்துகொள்ளலாம். நீர் என்ன நோக்கத்துடன் இங்கு வந்தீர் என்பதைச் சாவகாசமாகத் தெரிவிக்கலாம்' என்று கூறினள்.

தினகரன்:—நான் வேறு நோக்கத்துடன் இங்குவந்திருக்கிறேன் என்று நீ எப்படித் தெரிந்துகொள்கிருய், நீ அவ்வாறு நினைப்பதன் காரணமென்ன?

அம்மாது:—உம்மைப் போன்ற நாகரிகம் வாய்ந்த இளைஞர் வேறு ஏதேனும் நோக்கமின்றி இதைப்போன்ற ஒரு கேவலமான இடத்துக்கு வரமாட்டார்களல்லவா? சத்திரத்தில் தங்க அந்த ஏழைத் தொழிலாளருடன் கலந்திருக்க உமக்கு விருப்பமில்லையென்ருல் சத்திரத்தைச் சேர்ந்த தோட்டத்திலேனும் சிறிது நேரம் இளைப்பாறிக்கொண்டிருக்கலாமே.

**தினகரன்:**—ஓ! நீ கூர்மையான புத்தியுடைய மாதாகவே இருக்கிறாய். நான் இங்கு வந்தது வேறு ஒரு நோக்கமாகத்தான் என்று ஒப்புக்கொண்டுவிட்டால் எனக்கு வேண்டிய தகவல்களை நீ கொடுப்பாயல்லவா? ஏனெனில் இதோ பார்! உனக்கு வேண்டிய சன்மானத்தைத் தருவேன். (என்று சொல்லிக்கொண்டே அவன் தன்னிடமிருந்த பணப்பையிலிருந்து சில நாணயங்களை எடுத்து சிறிது தூரத்தில் உட்கார்ந்திருந்த அவள் மடிமீது வீசி எறிந்தான்.)

**அம்மாது:**—சரி! சந்தோஷம். நீர் இப்போது கொடுத்த பணத்தால் என் தரித்திரம் நிவர்த்தியாய்ப் போய்விடாதென்றாலும் இப்போதுள்ள நிலைமையில் எவ்வளவோ உதவியாகவே இருக்கிறது. உமக்கு இப்போது வேண்டிய தகவல்களென்ன?

**தினகரன்:**—இங்கிருந்து சுமார் முக்கால் மைல் தூரத்தில் வயல்கள், தோட்டம் ஆகியவற்றின் மத்தியில் அழகாகக் கட்டப்பட்டுள்ள அம்மாளிகையில் வசிப்பது யார்?

**அம்மாது:**—ஓ! தயவு செய்து மன்னிக்கவேண்டும். அவள் பெயர் எனக்குத் தெரியாது. ஒரு யௌவன மாது அதில் வசிக்கிறாள் என்பது மட்டும் நிச்சயமாகத் தெரியும்.

**தினகரன்:**—சரி; அம்மாது மிக அழகானவளாய் இருக்கிறாள் அல்லவா?

**அம்மாது:**—ஆம்; நான் அவளை ஒன்று அல்லது இரண்டு முறைதான் பார்த்திருக்கிறேன், அவள் கண்டோர் மனதைக் கவரும் ரூபலாவண்யமுடையவள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

**தினகரன்:**—அவள் யார் என்பதும், எவ்வளவு கால

மாக அங்கு இருக்கிறாள் என்பதும் உனக்குத் தெரியாதா? நீ இங்கே எவ்வளவு காலமாக இருக்கிறாய்?

அம்மாது:—நான் நீண்ட காலமாகவே இங்கு வசித்து வருகிறேன். அவள் யார், என்ன செய்கிறாள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவள் அம்மாளிகையில் இரண்டு மூன்று வாரங்களாகத்தான் இருக்கிறாள் என்பது மட்டும் நிச்சயமாகத் தெரியும்.

தினகரன்:—அவள் இரண்டு மூன்று வாரங்களாக இங்கே இருந்தும் நீ அவளைப்பற்றி ஒன்றும் தெரிந்து கொள்ளவில்லை யென்றால் அது ஆச்சர்யமாக இல்லையா? சரி, நான் வேறு எங்கேனும் சென்று விசாரிக்கிறேன். இதோ போகிறேன்.

அம்மாது:—அவசரப்படாதீர்கள். நீர் எங்கு சென்றாலும் உமக்கு வேண்டிய தகவல்களைத் தெரிந்துகொள்ள முடியாதென்பது திண்ணம். நீர் ஒன்றிரண்டு தினங்கள் இங்கு தங்கியிருப்பதாக இருந்தால் நானே முயற்சி செய்து உமக்கு வேண்டிய தகவல்களை யெல்லாம் விசாரித்துக் கொண்டுவந்து சொல்லிவிடுகிறேன். மேலும் உங்களுடைய எண்ணம் நிறைவேறும்படி செய்வதில் நான் மிக்க துணையாக இருப்பேன் என நினைக்கிறேன்.

தினகரன்:—என் எண்ணம் யாதாயிருக்கலாம் என நீ நினைக்கிறாய்? எனக்கு அதிகமான எண்ணமொன்று மில்லையே!

அம்மாது:—என்னை ஒரு முட்டாள் என்று நினைத்து விடாதீர்கள். இவளைப்போன்ற ஒரு அழகிய, யௌவன மாதைப் பற்றி உம்மைப்போன்ற ஒரு இளைஞர் விசாரிப்பதென்றால் அதற்கு உள்ளூர ஏதேனும் காரணமில்லாமல்

இருக்கமுடியுமா? இதைத் தெரிந்துகொள்வதற்கும் அபார மூளை இருக்கவேண்டுமா? நீர் இங்கு வந்ததும் களைப்படைந்திருப்பதாகச் சொன்னபோதே இதில் ஏதோ மர்மமிருக்கிறதென்று நான் தெரிந்துகொண்டுவிட்டேன்.

தினகரன்:—ஓ, நீ எதையும் ஒளித்துவைக்காமல் பேசும் சுபாவமுடையவளாக இருக்கிறாய். மேலும் விஷயங்களைக் கூர்ந்து நோக்கி உண்மையை அறிந்துகொள்ளும் சக்தியும் உனக்கு இருக்கிறது. ஆகையால் நானும் உண்மையைப் பேச விரும்புகிறேன். உண்மையிலேயே இப்போது நாம் பேசிக்கொண்டிருக்கும் அவ்வழகிய மங்கையின் விஷயத்தில் நான் அதிக அக்கரையுடையவனாகவே இருக்கிறேன். இவ்விஷயத்தில் நீ எனக்குத் துணைபுரிவதாயின்.

அம்மாது:—துணை புரிவதாயின் என்று ஏன் சொல்லுகிறீர்கள்? நான் என்னாலானதையெல்லாம் உமக்குச் செய்வதாக முன்னமே ஒப்புக்கொண்டுவிட்டேனே. இனியும் ஒளிக்காமல் என்னாலாகவேண்டியதைச் சொல்லிவிடுங்கள். நான் செய்யும் தொண்டிற்குப் பிரதியுபகாரமாக எனக்குத் தரவேண்டிய செல்வமும் உம்மிடம் இருக்கிறதென்றே நினைக்கிறேன். மேலும் உமக்கு விரோதமாக நான் வேலை செய்வதால் அதற்காக அம்மாளிகையிலுள்ள அம்மாது எனக்கொன்றும் கொடுக்கப்போவதில்லை என்பது நிச்சயம்.

தினகரன்:—முதலாவதாக, அவள் எத்தனை வேலைக்காரர்களை வைத்துக்கொண்டிருக்கிறாள் என்பதை நீ விசாரிக்கவேண்டும். யாரேனும் தோழிமார் அவளுக்குண்டா என்றும் விசாரித்தால் அப்படிப்பட்ட தோழிமார் சகஜமாக லஞ்சம் வாங்கி வேலைசெய்வது வழக்கமாதலின் நாம் மேற்கொண்டு காரியத்தை நடத்தலாம்.

அம்மாது:—சரி; இப்போது நீர் குறிப்பிட்ட வேலையைச் செய்துவிடலாம். இன்னும் செய்யவேண்டிய வேலை என்ன என்பதையும் தெரிவித்துவிடுங்கள்.

தினகரன்:—அவள் தனியாக மாலை நேரங்களில் எங்கேனும் உலாவச் செல்கிறாளா? அப்படிச் செல்வதாயின் எந்தப் பக்கம் செல்கிறாள்? அவளுடன் யாரேனும் செல்வது வழக்கமுண்டா? என்பன போன்ற விஷயங்களையும் நீ விசாரித்துக்கொள்ள வேண்டும்.

அம்மாது:—சரி! அதிகம் கூறுவானேன். விஷயமெல்லாம் எனக்கு விளங்கிவிட்டது. அவளைப்பற்றிய எல்லா விவரங்களையும் விசாரித்துவிடுகிறேன்.

தினகரன்:—அப்படியானால் இனி நான் இதற்காக வேறு எவருடைய துணையையும் தேடவேண்டியதில்லை என்று நினைக்கிறேன். இதில் மற்றொரு விசேஷமும் இருக்கிறது. இந்தக் காதல் லீலையிலும் நான் சிறிது வேடிக்கை செய்ய விரும்புகிறேன். அவள் என்னைப் பார்க்கும்போதே நான் பணக்காரனென்றோ அல்லது நாகரிகம் வாய்ந்தவனென்றோ தெரிந்து கொள்ள முடியாத வகையில் எளிய உடையை அணிய விரும்புகிறேன். கூடியவரை ஒரு ஏழையைப்போல் மாறுவேடம் அணிய விரும்புகின்றேன்.

அம்மாது:—ஓ! நீர் ஒரு வேலைக்காரன்போல் உடையை அணிய விரும்புகிறீர் போலும்! அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டுவிட்டால் நாளையதினம் நான் உமக்கு அதைக் கொண்டுவந்து கொடுக்கிறேன். நீர் அதிக உயரமாக இல்லாவிட்டாலும் பார்வைக்கு நேர்த்தியாக இருக்கின்றீர்கள்.

தினகரன்:—நான் விகாரரூப முடையவனல்ல என்று தற்பெருமை பாராட்டிக் கொள்வதுண்டு.

அம்மாது:—வாஸ்தவந்தான். அம்மாளிகையில் வசிக்கும் பெண்மணியை அனுபவிக்கக்கூடிய யோக்கியதைகள் யாவும் உமக்கு இல்லாமல் இல்லே.

தினகரன்:—அனுபவிக்க வேண்டுமென்றால் நான் அவளைக் கலியாணம் செய்துகொள்ள விரும்புவதாக நினைத்துவிட வேண்டாம்.

அம்மாது:—இதையெல்லாம் நீர் எனக்குச் சொல்ல வேண்டியதில்லே. கலியாணம் செய்து கொள்வதாய் இருந்தால் இவ்வளவு கஷ்டமென்ன? ஒளிமறைவு என்? நீர் அவளை அடையவும், அவளுடைய இன்பத்தை அனுபவிக்கவும் பிரியப்படுகிறீர்கள். அதில் உமக்கு வெற்றி கிடைக்குமென்பது நிச்சயம்.

தினகரன்:—அதையும் நீ எனக்கு உறுதி கூறுகிருயா? உன்னைப் பார்த்தால் இப்போது நீ இருக்கிற நிலைமையை விட நல்ல அந்தஸ்தில் இருந்திருக்க வேண்டுமென்று நினைக்க இடமிருக்கிறது.

அம்மாது:—ஆம்; நான் எப்போதும் இதே நிலைமையில் இருந்ததில்லே. ஆனால் இப்போது அதைப்பற்றியெல்லாம் பேசவேண்டாம். உம்முடைய முயற்சியைப்பற்றிய வரையில் அது விரைவில் கைகூடுமென்று நிச்சயமாகக் கூறுகிறேன். இன்று மாலே நான் பல விஷயங்களைப்பற்றியும் விசாரிக்க ஆரம்பித்துவிடுகிறேன். நான் வீண் கால தாமதம் செய்யமாட்டேன். உமக்கு வேண்டிய ஆடையையும் நாளைக்கே கொண்டுவந்து கொடுத்துவிடுகிறேன்.

தினகரன்:—அம்மணி! நான் என் காரியம் முடிகிற வரையில் அதாவது ஐந்தாறு நாட்கள் வரை இங்கேயே தங்குவதென்றால் சமீபத்தில் எங்கேனும் நல்ல இடம் கிடைக்

குமார்? சமீபத்தில் இருந்தால்தானே அடிக்கடி நடக்கும் விஷயங்களை அப்போதைக் கப்போது தெரிந்து கொள்ளலாம்.

அம்மாது:—ஆம்; அது வாஸ்தவந்தான். நீர் எடுத்துக் கொண்ட முயற்சியில் வெற்றியடைய வேண்டுமென்றால் சில தினங்கள்வரை சௌகரியமற்ற இடத்திலும் இருக்க வேண்டியதுதான். அவ்வாறு இருக்க நீர் சம்மதிப்பதாயின் இங்கேயே உங்களுக்குப் படுக்கையைத் தயாரித்துக் கொடுப்பேன். நாளையதினம் இரத்தினபுரிக்குச் செல்லும்போது படுக்கைக்கு வேண்டிய இதர வசதிகளையும் கொண்டுவந்து தருகிறேன்.

தினகரன்:—உன் இஷ்டப்படியே செய்கிறேன். நமது காரியம் முடிந்த பின்னர் அவளும் நமது முயற்சியைக் கண்டு ஆச்சர்யப்படுவாள். நானும் உனக்கு வேண்டிய சன்மானத்தைத் தருவேன். இப்போது எனக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்ய இந்த பத்து பவுன்களை வைத்துக்கொள். உன் யோசனையின்படியே எல்லா வேலைகளையும் செய்து முடி.

அம்மாதும் அத்தொகையை எடுத்துக்கொண்டு மறுநாள் அவன் எப்போது வருவான் என்று விசாரித்தாள். அதற்கு அவன், 'நான் இவ்விஷயத்தில் மிக்க ஆவலுடையவனாக இருக்கிறேன். ஆதலின் நீ காரியத்தை விரைவில் முடித்து வை. நீ எப்போது வரச் சொல்லுகிறாயோ அப்போது தவறாமல் வந்துவிடுகிறேன்' என்று விடையளித்தான். அம்மாது, 'நான் சிறிதும் காலதாமதம் செய்யாமல் தீவிரமாக விசாரணை செய்வேன் என்று முன்னமே சொன்னேனல்லவா? நீர் நாளை மாலை இங்கு வந்தால் இதற்குள் நான் உமக்கு வேண்டிய தகவல்களையெல்லாம் விசாரித்து வைக்கிறேன்' என்று தெரிவித்தாள்.

அதைக் கேட்டுத் தினகரன் மிக்க சந்தோஷமடைந்து தான் எடுத்த முயற்சியில் வெற்றி கிடைப்பதற்கு அறிகுறியாகத் தற்செயலாய் ஒரு விடுதியில் ஒரு மாது கிடைத்ததைக் கண்டு சந்தோஷமடைந்தான். அவன் உடனே அங்கிருந்து புறப்பட்டு ஒரு வாடகை வண்டியை அமர்த்திக் கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தான்.

---

## 11-வது அத்தியாயம்

### நடுக்குப்பத்தில் கூட்டம்

இரத்தினபுரியின் கிழக்கோடியில் நடுக்குப்பம் என்னும் பெயரையுடைய ஒரு பிரதேசம் இருந்தது. அந்த இடம் இரத்தினபுரியின் அழகுக்கும் நாகரிகத்துக்கும் ஒரு திருஷ்டி பரிகாரம்போல் மிக்க ஆபாசமானதாய் இருந்தது. அதில் வசிப்பவர்களும் இடத்துக்கேற்ற பிரஜைகளாகவே இருந்தனர். அங்கு ரஸ்தாக்களெல்லாம் மேடும் பள்ளமுமாய் கால் தரையில் வைத்து நடக்க முடியாதபடி அவ்வளவு கேவலமானதாய் இருந்தன. அங்கிருந்த சிறு வீடுகளெல்லாம் மிகப் பழைய கட்டடங்களாயும், சுகாதாரக் கேடானவைகளாயும் இருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் ஏழெட்டு குடித்தனங்கள் இருந்ததால் ஜன நெருக்கம் அதிகமாய் இருந்தது. ஜனங்கள் நாகரிகமற்றவர்களாயும், மிக்க ஏழைகளாயும் இருந்ததுடன் அவர்களில் பெரும்பாலோர் போக்கிரிகளாகவும், எப்படிப்பட்ட கொலை, களவு முதலிய காரியங்களையும் துணிந்து செய்யக்கூடியவர்களாயும் இருந்தனர். ரஸ்தாக்களில் இராக்காலங்களில் விளக்கே இராது. அங்குள்ள ஐந்தாறு கடைகளில் மட்டும் சிறு விளக்குகள் மினுக்,

மினிக் என்று எரிந்துகொண்டிருக்கும். ஆகவே எல்லாம் இருட்டு மயமாக இருக்குமாதலின், எப்படிப்பட்ட தைரிய சாலிகளும் அங்குச் செல்ல அஞ்சுவர். இரத்தினபுரியிலுள்ள ஜன சமூகத்தால் பகிஷ்கரிக்கப்பட்டவர்களும், கல்வி சிறிது மில்லாமையால் அறியாமை நிரம்பி அதன் காரணமாக எத் தகைய பாவச் செயல்களையும் செய்பவர்களுமே அக் குப்பத் தில் வசித்து வந்தார்கள். சட்டசபை அங்கத்தினர்களோ அல்லது சமய, சமூகப் பிரசாரகர்களோ, அல்லது வேறெந்த பூததயை யுடையவர்களோ அங்குச் சென்று தங்கள் அறி வையும் செல்வத்தையும் அங்குள்ளோருக்காகப் பயன்படுத்தி அவர்களை முன்னேற்றமடையச் செய்யவேண்டும் என்று நினைத்ததுமில்லை. ஆனால் போலீஸ்காரர்கள் மட்டும் அடிக் கடி அங்குச் சென்று குற்றவாளிகளைத் தேடுவதுண்டு. ஆனால் நடுக்குப்பத்தில் சென்று மறைந்து கொண்ட குற்றவாளிகள் போலீசார் கையில் அகப்படுவது மிக அபூர்வம். யாரே னும் திருடர், ஜனங்கள் கைக்கு அகப்படாமல் தப்பியோட முயன்று அவர்கள் நடுக்குப்பத்தில் புகுந்துவிட்டால் பிறகு ஓடுவதே வழக்கமில்லை. இனி பயமில்லையென்று நிம்மதி யடைந்துவிடுவார்கள்.

அப்படிப்பட்ட அந்த பயங்கரமான இடத்தில் ஒரு மூலை யில் இடிந்துபோன ஒரு மாளிகை இருந்தது. அதன் சொந் தக்காரர்கள் கோபாலன் தம்பதிகள். அவர்கள் திருட்டுச் சாமான்களையெல்லாம் உபாய விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்றுவந்ததாலும், மதுபான வகைகளில் தாராளமாகத் தண் ணீர் சேர்த்துத் தங்களுக்கு இஷ்டமான விலைக்கு விற்று வந்ததாலும் பணக்காரர்களாயிருந்தார்கள். அந்த வீட்டில் தான் இப்போது நாம் பிரஸ்தாபிப்பதற்குப் பத்தொன்பது வருஷங்களுக்கு முன் சுந்தரம் பிரபுவின் சகோதரர் புத்திர

னை ராஜசேகரன் ராட்சஸ குப்பனைச் சந்தித்து குழந்தை தினகரனைக் கொல்ல ஏற்பாடு செய்தான் என்பதை நேயர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறோம். தினகரம் பிரபு ராஜலட்சுமியை அடையும் விஷயமாய்த் தனிவிடுதியில் இருந்த அம்மாதுடன் பேசிவிட்டுத் திரும்பிய அன்று இரவு சுமார் பத்து மணிக்கு நாம் மேலே குறிப்பிட்ட கோபாலன் தம்பதிகளின் மாளிகையாகிய 'சிங்கக் குகை' என்னுமிடத்தில் ஒரு அறையில் ஒரு மேஜையைச் சுற்றி ஆடவரும் மாதருமாகப் பத்துபேர் உட்கார்ந்துகொண்டு புகைச்சுருட்டை உபயோகித்துக் கொண்டிருந்தனர். மேஜையின்மீது இரண்டு மூன்று மெழுகுவர்த்தி விளக்குகள் எறிந்து கொண்டிருந்தன. ஒவ்வொருமேஜைமீதும் கண்ணாடிப் பாத்திரத்தில் மதுபானவகை வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் அதை அடிக்கடி அருந்திக் கொண்டிருந்தார்கள். அக்கூட்டத்துக்குத் தலைவனாய் இருந்தவன் பத்தொன்பது வருஷங்களுக்கு முன் இராஜசேகரன் ஏவலினால் தினகரனைத் தூக்கிச் சென்ற ராட்சஸ குப்பனே. இந்தப் பத்தொன்பது வருஷ காலத்துக்குள் அவனுடைய ஆயுள் வளர்ச்சி யடைந்ததேயொழிய குணமோ, புத்தியோ அபிவிருத்தியடையவில்லை. அவனுடைய போக்கிரித்தனமும், கொடிய சுபாவமும் அதிகமாயிற்று. அவன் எப்போதையும் போலவே ஆபாசமான உடையை அணிந்துகொண்டிருந்தான். அவனுடைய கால் சட்டையின் பையில் நன்றாகக் கெட்டிக்கப்பட்ட இரண்டு கைத்துப்பாக்கிகள் இருந்தன. அவன் மற்றவர்களைப்போல் அதிகம் பேசாமல், மற்றவர்கள் பேசுவதையும் செய்வதையும் பார்த்துக் கொண்டிருந்தான். எப்போதுமே காரியவாதிகள் அதிகம் பேசும் பழக்கமில்லையல்லவா? அவன் அதிகம் பேசவில்லையென்றாலும் அப்போதைக்கப்போது மற்றவர்கள் பேசுவதைப் புன்சிரிப்புடன் ஆமோதித்துக் கொண்டிருப்பான்.

இவர்கள் இவ்வாறு ஆனந்தக் கூத்தாடிக் கொண்டிருந்த போது ஒரு குதிரை அதிவேகமாய் ஓடிவரும் சப்தம் கேட்டது. அப்போது எல்லோரும் அருகிலிருந்த ஜன்னலின் வழியே குதிரைமீது யார் வருவதென்று கவனித்தார்கள். உடனே ஒரு மாது, 'இந்திராபாய் வருகிறுள்' என்று சொன்ஞள். மற்ருெரு மாது சந்தோஷத்துடன் ஆரவாரம் செய்து கொண்டே, 'ஓ, அப்படியானுல் நமக்கு இன்று நல்ல விருந்து கிடைக்கும்' என்ருள். அப்போது ராட்சஸ குப்பனும், 'ஆம்' அவள் வந்தால் நமக்கு நல்ல கிராக்கிதான். அவள் இங்கு அடிக்கடி வரும்போதெல்லாம் லட்சியமில்லாமல் பணம் செலவு செய்து நமக்கு இனிய விருந்து அளிக்கிருள். அவள் எனக்கு ஏற்ற ஜோடி என்றே நினைக்கிறேன்' என்று கூறினுன்.

ராட்சஸ குப்பன் இவ்வாறு பேசி முடித்ததும் அவ்வறையின் கதவு திறக்கப்பட்டது. உடனே அவ்வறையில் ஒருவன் புகுந்தான். அவன் ஆடவனைப்போல் காணப்பட்டானென்ருலும் ஆடவன் அல்ல. ஆடவன் வேஷம் தாங்கிய மாதே. அவள் சுமார் ஆறு அடி உயரமுடையவளாயும், நல்ல அழகிய தோற்ற முடையவளாயும் காணப்பட்டாள். அவள் மிக்க தைரிய முடையவளாயும், துணிவுடன் எக்காரியத்தையும் செய்யும் ஆற்றலுடையவளாயும், எதையும் கூர்ந்து கவனித்து அறியக்கூடியவளாயும் இருந்தாள். அவள் அணிந்திருந்த உடை மிகவும் பொருத்தமானதாகவும் விலையுயர்ந்ததாயும் இருந்தன. அவள் சுமார் இருபத்து ஆறு வயதுடையவளாய் இருந்தாள். அவள் குரல் மிகக் கம்பீரமானதாய் இருந்தது. அவள் முகத்திலிருந்தே காமவிகாரத்தில் அவள் சிறந்தவளென்று தெரிந்தது. அவள் யார் என்பதும், அவளுடைய முழு வரலாறு என்ன என்பதும் பின்னுல் விவரிக்

கப்படும் என்றாலும் இப்போது அவள் இந்திராபாய் என்னும் பெயருடன் அங்கு வந்திருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டால் போதுமானது. அவள் அந்த அறையில் புகுந்ததும் அவளுக்கு அருவருப்பு தோன்றியதென்றாலும் அவள் அதை மறைத்துக் கொண்டு புன்சிரிப்புடன், 'ஓ, நீங்கள் உல்லாசமாகவும் உற்சாகமாகவும் பல விஷயங்களைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறீர்கள் போலும்! இது நாளை விடியற்காலைவரை நீடித்திருக்குமோ?' என்று கேட்டாள். உடனே ராட்சஸ குப்பன் 'நீயும் எங்களுடன் உட்கார்ந்து இந்த விவாதத்தில் கலந்து கொள்ள மாட்டாயோ' என்று மிக ஆர்வத்துடன் கேட்டான். அதற்கு அவள் இல்லை, எனக்குச் சாவகாசமில்லை. நான் மிக அவசரத்துடன் போக வேண்டும்? என்று விடையளித்தாள். உடனே அவனும் 'நீ எப்போது வந்தாலும் இப்படித்தான் கூறுகிறாய்,' என்றான். அதற்கு அவள், 'நான் உனக்கு எந்தச் சமயத்திலும் உதவி செய்யத் தவறியதில்லை யல்லவா? நீ காயலாவாக இருந்து எழுந்தபோது நான் உனக்கு வேண்டிய உதவிகளை யெல்லாம் செய்யவில்லையா? நான் செய்த பண உதவியைத் திருப்பிக் கேட்டேனா? நீ திருப்பிக் கொடுத்தாலும் அதை நான் பெறப்போவதில்லை. ஆனால் நீ எனக்கு வேண்டிய உபகாரங்களைச் செய்தால் போதும்' என்று கூறினாள். அப்போது அங்கே இருந்த எல்லாரும், 'ஆம், ஆம். இந்திராபாய் கூறியது உண்மையே' என்று ஏககாலத்தில் சொன்னார்கள். பின்னர் இந்திராபாய், 'சரி, போதும்; வீண்வாதம் வேண்டாம். இவ்வீட்டின் சொந்தக்காரர் கோபாலன் எங்கே?' என்று கேட்டாள்.

அப்போது கோபாலன், 'ஏனம்மா! இதோ இருக்கிறேன்' என்றான். உடனே அவள், 'இங்கிருக்கும் எல்லா

ருக்கும் விருந்து அளிக்க வேண்டும். அதற்கு வேண்டிய ஆகாரத்தையும் மதுபான வகைகளையும் தயாரிப்பாய் என்று நம்புகிறேன்' என்று சொன்னாள். அதைக் கேட்ட அங்கிருந்த ஒரு மாது, 'விருந்தைத் தயாரிப்பது மிக எளிதுதான். ஆயினும் நீயும் இங்கிருந்து எங்களுடன் ஆகாரம் உட்கொண்டால் எங்களுக்கெல்லாம் திருப்தியாக இருக்கும்' என்றாள். அதற்கு இந்திராபாய், 'நானும் உங்களுடன் இருக்கவேண்டுமென்று நீங்கள் விரும்புவதைக் கண்டு சந்தோஷப்படுகிறேன். ஆனால் எனக்குச் சாவகாசமில்லையென்று முன்னமே சொல்லியிருக்கிறேனல்லவா? இங்கே இப்போது எனக்கு உதவி செய்யக்கூடிய ஆள் யார் இருப்பது? நான் ஒரு வேலையாக ஒருவரை அனுப்பவேண்டியிருக்கிறது' என்று கேட்டாள். பல ஆடவர்கள் போட்டி போட்டுக்கொண்டு அவளுடைய வேலையைச் செய்ய முன்வந்தார்கள். ஆனால் அவள் எல்லாருடைய முகத்தையும் உற்றுப் பார்த்துவிட்டுக் கடைசியில் ஜெயசிங் என்பவனைப் பார்த்து, 'ஜெயசிங்! நான் உன்னைத்தான் அனுப்பலாமென்று நிச்சயித்திருக்கிறேன்' என்று சொன்னாள்.

ஜெயசிங் சுமார் இருபத்து நான்கு வயதுடைய வாலிபன். அவன் மற்றவர்களைப்போல அவ்வளவு அயோக்கியனல்ல என்று நினைக்கும்படி அவனுடைய முகத்தோற்றத்தினின்றும் தெரிந்தது. இந்திராபாயும் அதனாலேயே அவனை நம்பினாள். அவன் எவ்வித வேலையையும் உண்மையுடனும் உற்சாகத்துடனும் செய்வான் என்று அவளுக்குத் தோன்றியது. அவனும் அதிக உற்சாகத்துடன் அவளுடைய வேலையைச் செய்வதாக முன் வந்தான். இந்திராபாய் அவனைக் கண்டு, 'ஜெயசிங்! நீ இந்த மூட்டையைக் கொண்டுபோய் பிராட்வே மூனையில் ஒரு மனிதர் நன்றாகப் போர்த்திக்

கொண்டு, யாரையோ எதிர்பார்ப்பவர்போல் மேலும் கீழு மாக உலாவிக் கொண்டிருப்பார். நீ அவரைப் பார்த்து, “இந்த இரவு மிகவும் இருட்டாய் இருக்கிறது’ என்று சொல்ல வேண்டும். அதற்கு அவர், ‘ஆனால் அதைப் பிரகாசமுள்ள தாகச் செய்துவிடலாம்’ என்று சொல்வார். அவர் இந்த பதிலைச் சொல்வாரானால் உடனே இந்த மூட்டையை அவ ரிடம் கொடுத்துவிட்டு நீ விரைவாக வந்துவிடு. ஆனால் அவர் நான் சொன்ன பதிலைக் கொடுக்கவில்லை யென்றால் நீ மூட் டை கொடுக்கவேண்டிய மனிதர் அவரல்ல என்று உணர்ந்து கொண்டு வேறு யாரேனும் நான் சொன்ன பதிலை கொடுக்கக் கூடியவரைக் கண்டு அவரிடமே இதைக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட வெயில் நாளில் ஏதேனும் குறிப்பிட்ட கார ணம் இல்லாவிட்டால் யாருமே அநாவசியமாகப் போர்த்திக் கொள்ளமாட்டார்கள் அல்லவா? நீ திரும்பிவந்ததும் என் ஏற்பாட்டின்படி நடக்கப்போகிற விருந்தில் கலந்து கொள்ள லாம்’ என்று தெரிவித்தாள்.

ஜெயசிங்கும் தான் மேற்கொண்ட வேலையை நம்பிக்கை யுடனும் சாமர்த்தியமாகவும் செய்து முடிப்பதாக ஒத்துக் கொண்டான். பிறகு அவன் அந்த மூட்டையை வாங்கிக் கொண்டு தனக்குள்ள ஆடைகளை அணிந்தவனாய் அங்கிருந்து புறப்படத் தயாரானான். அப்போது இந்திராபாய் அவனை நிறுத்தி, ‘ஜெயசிங் நான் உன் விஷயத்தில் நம்பிக்கை இல்லா தவளாக இல்லை. நீ மட்டுமல்ல. உங்கள் தலைவர் ராட்சஸ குப்பன் உள்பட இங்கிருக்கிற அனைவருமே என் விஷயத் தில் உண்மையுடன் நடந்து கொள்வீர்களென்பதை நான் அறிவேன். எனினும் நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிடுவது என் கடமையல்லவா? இந்த மூட்டையில், இது யாருக்குப் போய்ச்சேரவேண்டுமோ அவருக்குப் பலன்

தாக்கூடிய வஸ்து இருக்கிறதே யொழிய இதனால் மற்றவர் களுக்கு எப்படிப்பட்ட பலனும் இல்லை என்பதை நீ தெரிந்து கொள்ள வேண்டும். ஆதலால் இதில் பணமோ அல்லது நோட்டுகளோ இருக்கும் என்னும் எண்ணத்துடன் இதை அவிழ்த்துப் பார்க்க வேண்டுமென்று உனக்குத் தோன்றுமா யின் இதனால் நீ எப்படிப்பட்ட பலனையும் அடையமாட்டாய் என்பது நிச்சயம்' என்று எச்சரிக்கை செய்தாள். அதற்கு அவன், 'இல்லை, இல்லை. நான் அப்படியெல்லாம் செய்யமாட் டேன்' என்று கூறிக்கொண்டே அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான்.

அவன் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் அம் மாளி கையின் சொந்தக்காரரும் மதுபான வியாபாரிகளுமாகிய கோபாலன் தம்பதிகள் ஒரு பெரிய பாத்திரத்தில் மதுபான வகையைக் கொண்டுவந்து அங்கே வைத்தார்கள். இந்திரா பாய் முதலில் ஒரு சிறு பாத்திரத்தில் கொஞ்சம் எடுத்து அருந்திக் கொண்டே, 'நீங்கள் எல்லாம் சுகமாய் இருக்க வேண்டும் என்பதற்காக நான் இதை அருந்துகிறேன். குப்ப னும் சிறிது அருந்திவிட்டு என்னுடன் இன்பமாகச் சிறிது நேரம் சம்பாஷணை செய்வார் என்று நம்புகிறேன்' என்று கூறினாள். அப்போது ராட்சஸ குப்பனும் மதுபானத்தைச் சிறிது, அருந்திவிட்டு, 'இந்திராபாய்! எங்களை யெல்லாம் உன் இஷ்டப்படி ஆட்டக்கூடிய சக்தி உனக்கு இருக்கிறது. இதோ உன் கட்டளையின்படியே நானும் நடந்து கொள்கி றேன்' என்றான். பிறகு அவர்களிருவரும் சிறிது நேரம் வேடிக்கையாக சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்துக்குப் பின்னர் அவள் அவ்விடத்தைவிட்டுச் செல்ல முயன்றபோது அங்கிருந்தவர்கள், இன்னும் சிறிது நேரம் இருந்து ஜெயசிங் திரும்பிவருவதையும் பார்த்து அவள்,

'நான் இருக்கவேண்டிய அவசியமில்லை. அவன் அவ்வேலையை ஒழுங்காக முடித்துவிடுவான் என்னும் நம்பிக்கை எனக்குப் பூரணமாக இருக்கிறது. ஆகவே நான் போய் வருகிறேன்' என்று சொல்லிக்கொண்டே அவ்விடத்தைவிட்டுச் சென்றாள். அவள் வெளியில் நின்று கொண்டிருந்த தன் குதிரைமீது ஏறிக்கொண்டு ஆண் வேஷத்துடனேயே வந்த வழியே சென்றுவிட்டாள்.

அவள்சென்ற கால்மணி நேரத்துக்குப் பிறகு ஜெபசிங் திரும்பி வந்தான். அனைவரும் அவனை என்ன விசேஷமென்று கேட்டார்கள். அதற்கு அவன் இந்திராபாய் சொன்னபடியே போர்த்திக் கொண்டிருந்த ஒரு ஆளைக் கண்டதாகவும் அவன் தான் எதிர்பார்த்த பதிலையே அளித்ததாகவும் அதற்குமேல் மூட்டையை அவனிடம் கொடுத்துவிட்டதாகவும் தெரிவித்தான். அப்போது அங்கிருந்த பெண்கள், 'அவன் நல்ல அழகுடையவனாய் இருந்தானா?' என்று மிக ஆவலுடன் விசாரித்தார்கள். அதற்கு அவன், 'நான் அவன் முகத்தை நன்றாய்ப் பார்க்க முடியவில்லை. அவன் ஜாக்கிரதையாகப் போர்த்திக்கொண்டிருந்தான். ஆயினும் உயரமுள்ளவனாயும், நேர்த்தியான உடையை அணிந்தவனாயும் இருந்தான்' என்று விடையளித்தான். அம்மனிதன் ஒருகால் இந்திராபாயின் காதலனாக இருக்கலாமோ என்று அங்கிருந்த பெண்கள் சந்தேகித்தார்கள்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் மற்றொரு புதிய மாது அவ்வறையில் நுழைந்தாள். அவளை அங்கிருந்த அனைவரும் ஆர்வத்துடன் வரவேற்றார்கள். அவளது பெயர் மரகதம் என்று கூறப்பட்டது. அவள் சுமார் நாற்பதுக்கு மேல் ஐம்பது வயதுக்குள்ளானவளாக இருந்தாள்.

அவளுடைய கரிய கூந்தல் நரைத்துவரத் தொடங்கியிருந்தது. அவள் எளிய உடை அணிந்திருந்தாள். அவளைக் கண்டதும் ராட்சஸ குப்பன், 'நீ இப்போது இங்கே வந்ததன் காரணம் என்ன?' என்று வினவினன். அதற்கு அவள், 'உன்னுடன் அவசரமாகப் பேசவந்தேன். இன்று ஒரு விஷயம் நேர்ந்தது. அதனல் நமக்கு நல்ல அறுவடை கிடைக்கும்போல் இருக்கிறது. ஆகவே அந்த அறுவடை செய்வதில் நீ எனக்கு உதவி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கத்தான் இங்கே வந்தேன்' என்று விடையளித்தாள். அவன், 'நீ இவ்விஷயத்தை இரண்டுமுறை சொல்ல வேண்டியதில்லை. அதைப்பற்றி இப்பொதே பேசிவிட வேண்டுமா? அது அவ்வளவு அவசரமானதா?' என்று கேட்டான். அதற்கு அவள், 'ஆம்; மிக அவசரம்தான். நான் உடனே வீட்டுக்குத் திரும்பிவிடவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே தன் பின்னல் வரும்படி ராட்சஸ குப்பனுக்கு ஜாடைகாட்டிவிட்டு அவள் வேறு அறைக்குச் சென்றுள்.

ராட்சஸ குப்பனும் அவள் பின்னலேயே மாடியிலிருக்கும் ஒரு அறைக்குச் சென்றுன். அங்கே அவர்களிருவரும் அரைமணி நேரம் வரை இருந்து பல விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். சம்பாஷணை முடிந்ததும் மாகதம் அவ்வீட்டைவிட்டுச் சென்றுள். ராட்சஸ குப்பன் மற்ற கூட்டத்தாருடன் வம்புபேசச் சென்றுன்.

## 12-வது அத்தியாயம்

### மீண்டும் தோட்ட மத்ய விடுதி

மறுநாள் இரவு சுமார் ஒன்பது மணிக்கு தினகரம் பிரபு முன்நாள் மாலை தோட்ட மத்தியிலிருந்த விடுதியில் சந்தித்த மாதினிடம் தெரிவித்திருந்தபடி அவ்விடுதிக்கு வந்து சேர்ந்தான். முன்போலவே அவ்விடுதியின் கதவைத் தட்டினான். உடனே அதிலிருந்த மாது அங்குவந்து கதவைத் திறந்தாள். முன்நாள் இரவு அவர்களிருவரும் எந்த அறையில் இருந்து கொண்டு சம்பாஷித்தார்களோ அதே அறைக்கு அன்றும் அழைத்துச் செல்லப்பட்டான். அந்த அறையில் ஒரு மேஜையின்மீது சிறு மெழுகுவர்த்தி விளக்கொன்று எரிந்து கொண்டிருந்த தென்றாலும் அவ்வறை இருட்டாகவே இருந்ததால் அதில் இருப்பதற்கு முதலில் தினகரனுக்குச் சிறிது கஷ்டமாகவே இருந்தது. அவன் அவளைப் பார்த்த வண்ணம், 'சரி! என்ன சங்கதி? நீ கண்டு பிடித்த விசேஷங்களென்ன?' என்று கேட்டான். அதற்கு அவள், 'நான் ஏதேனும் விஷயத்தை விசாரித்து வைப்பேன் என்று நேற்றே தெரிவித்தேன் அல்லவா? நிதானமாக உட்கார்ந்து நான் சொல்வதைக் கேளுங்கள்' என்றாள்.

அவள் சொன்ன ஆறுதல் மொழிகளைக் கேட்டதும் அவனுக்குச் சந்தோஷம் அதிகரித்துவிட்டது. மேலும் அவன் தன் கையில் கொண்டுவந்திருந்த மதுபானத்தையும் சிறிது அருந்துவிட்டதால் அவனுக்குத் தைரியமும் ஏற்பட்டுவிட்டது, ஆகவே அவன் அங்கு சாவகாசமாக உட்கார்ந்து அவள் சொல்வதைக் கேட்க ஆரம்பித்தான். அவள் கூறியதாவது:—"நான் நேற்று மாலை 'பச்சை மாளிகை' என்னும்

பெயரையுடைய அம்மாளிகைக்குச் சென்று நீர் குறிப்பிட்ட அம் மாதரசியின் வேலைக்காரி ஒருத்தியைப் பிடித்தேன். அவள் இயற்கையாகவே சிறிது வாயாடியாய் இருந்தாள். நான் தாராளமாக அவளிடமிருந்து பல சங்கதிகளை இழுத்து விட்டேன். நான் அவளிடம் ஒரு அழகிய பணக்கார வாலிபன் அவளுடைய எஜமானியிடம் தணியாக் காதல் கொண்டிருப்பதாகத் தெரிவித்தேன். பிறகு அவள் நான் கூறியதை மிகக் கவனத்துடன் கேட்டாள். ஏனெனின் அவளுக்கு இதனால் ஏதேனும் வரும்படி கிடைக்குமென்று நினைத்தாள் போலிருக்கிறது. பிறகு நாங்கள் எதையும் ஒளிக்காமல் பகிரங்கமாக எல்லாவற்றையும் பேசினோம். அவளுடைய எஜமானி நாடக மேடையில் தன் ஆற்றலைக் காண்பிப்பவள் என அவள் கூறினாள்'' என்று சொல்லி முடிப்பதற்குள் தினகான் மிக ஆவலுடன், 'ஆம்; அது மெய்தான். அது எனக்கு முன்னமே தெரிந்த விஷயம். எனினும் இவ்விதமாகவேனும் அம்மாளிகையில் வசிப்பது நாடகமேடையில் ஆற்றலைக் காண்பிக்கும் அவளே என்று தெரிந்துவிட்டது நல்லதுதான். இன்னும் அவள் என்ன சொன்னாள் என்பதைச் சொல்' என்றான்.

அதற்கு அவள், 'அம்மாதரசி தனக்குத் தெரிந்த சில ஆடவர்களை மட்டும் அங்கு சேர்க்கிறாளாம். அவள் காலையில் ஆகாரம் முடிந்ததும் இளம் வெயிலில் வெளியில் தோட்டங்களில் உலாவச் செல்வதுண்டாம். சிற்சில வேளைகளில் தனியாகப் போனாலும் பெரும்பாலும் அவளுடைய வேலைக்காரியும் அவளுடன் செல்வதுண்டாம்' என்று தெரிவித்தாள். 'அவள் எத்தனை மணிக்கு அவ்வாறு உலாவச் செல்கிறாள் என்று விசாரித்தாயா?' என்று தினகான் மிக ஆவலுடன் கேட்டான். அதற்கு அவள், 'ஆஹா! அதுவும் விசாரித்

தேன். அவள் ஒன்பது மணிக்குமேல் பத்து மணிக்குள் அவ்வாறு செல்கிறுள்' என்று கூறி முடித்ததும் அவன் குதுகலத்துடன், 'ஓ! அப்படியானல் சரி! நாளை காலையே நான் எனது அன்புக் களஞ்சியமாகிய அவளைச் சந்திப்பேன் எனக்கு வேண்டிய எளிய உடைகளைக் கொண்டு வந்தாயா? என்று அவசரமாகக் கேட்டான்.

அப்போது அம்மாது 'ஆம்; அதோ இருக்கிறது. அந்த வேலைக்காரியும் உம் எண்ணத்தை முடித்துக் கொடுப்பவள் போலவே பேசினுள். உம்மைக்கண்டதும் அவள் தன் எஜமானியிடம் உம்மைக் காண்பிக்கத் தவறமாட்டாள். அப்போது அவள் நீங்கள் இந்த எளிய உடையை அணிந்திருந்தாலும் எவ்வளவு பெரிய இடத்து ஆள் என்பதைத் தெரிவித்து உம்மைப்பற்றிச் சிலாகித்துப் பேசத் தவறமாட்டாள்' என்று கூறினுள். அதைக் கேட்டதும் தினகரனுக்கு அளவிலா ஆனந்தம் உண்டாய் விட்டது. ஆகவே அவன்தான் ஜெயித்து விடுவது நிச்சயமெனக்கொண்டு அந்த சந்தோஷத்தால், 'நல்லதுதான். இதைவிட அவள் எனக்கு வேறு என்ன செய்யவேண்டும். சரி; இப்போது நான் அந்த சத்திரத்துக்குப்போய் இரவு அங்கு கழித்துவிட்டு நாளை காலை வருகிறேன் உன் அபிப்பிராயம் என்ன? என்று கேட்டான். அதற்கு அம்மாது, 'அங்கே நீங்கள் போனுல் அங்கிருக்கும் சிலர் உங்களை அறிந்து கொண்டுவிட்டால் நீங்கள் இங்கு இருப்பதாகப் புகார் கிளம்பி விடுமல்லவா? அதனுல் உங்கள் வேலைக்குப் பங்கம் ஏற்படுமன்றோ. நீங்கள் நினைத்த காரியம் கட்டாயம் கெட்டுப்பொகும் என்று எனக்குத் தோன்றுகிறது' என்று விடை யளித்தாள்.

அதற்கு அவன், 'ஆம், நீ சொல்வது சரிதான். என் காரியம் கெட்டுப்போகும்படியான எத்தகைய் ... மாட்டாள்

186567

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம்,4-ம்,5-ம்,6-ம் பாகம் நாவல்கள் முடிவு பெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 7-ம் பாகம் என்கிறநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | |
| பவளத்தீவு 2 பாகமும் | ரூ. | 3 | 0 | |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ரூ. | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |
| கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் | ,, | 3 | 4 | 0 |
| இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் | ,, | 2 | 0 | 0 |
| இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம் | ,, | 1 | 12 | 0 |
| சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி | ,, | 2 | 0 | 0 |

மானேஜர்:—"**ஆனந்த நிலையம்,**" தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

# “ஆனந்தபோதினி”

## ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஹு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு. நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அரிய விருத்திகரமான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் | | | தினகரசுந்தரி ரூபா | 1 | 0 |
| 6-பாகமும் ... | 11 | 10 | தபால்கோள்ளைக்காரர் | 0 | 14 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | ரத்தினாபாய் ... | 1 | 18 |
| கற்கோட்டை ... | 2 | 0 | வீரநாதன் ... | 0 | 10 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 2 |
| கனகபூஷணம்2பாகம் ... | 3 | 8 | கமலசேகரன் ... | 1 | 12 |
| இராஜாமணி ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 12 |
| ஆனந்தவலி ... | 2 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| ஞானசெல்வாம்பாள் | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| 6 5 பாகமும் ... | 9 | 10 | லோகநாயகி | 1 | 0 |

விலாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்